திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 8

★ தேவியாரின் நிருபம் ★

இன்றல்ல! எப்போதும்!—சமாதான நடவடிக்கைகளில், நம்பிக்கையுடையவர், என் அண்ணன்.

எங்கள் நாட்டில் மட்டுமல்ல! உலக முழுமைக்கும்!—சமாதானத் தூதராகப் பணியாற்றுபவர், என் அண்ணன்.

நிதானம், முன் யோசனை, அமைதி ஆர்வம் — ஆகியவைகளோடு பணியாற்றி வருபவர் என் அண்ணன்.

✱

"சுட்டுத் தள்ளுவாயா? சுடு" என்று முழக்கமிட்டுச் சென்ற தமிழ்ப்பெண் சுபத்ரா, சாவுக்கும் வாழ்வுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கும் நேரத்திலே, கோவாவிலே நடைபெற்ற, கொடுமைகளைக் கேட்டு குமரி முதல் இமயம் வரை கொதிப்புண்டு கிடக்கும் வேளையிலே; கட்சி மாச்சரியங்களைக் கடந்து கசடர்தம் குண்டுகளால் மனித உயிர்கள் மாண்ட கோரத்தைக் கண்டித்து "வீழ்க கோவா ஆதிக்கம்," என்று எல்லோரும் போர்ப்பரணி எழுப்பும் இந்தச் சமயத்திலே; இலண்டன் மாநகரிலே, இந்தியச் சின்னமாக விளங்கும் விஜயலட்சுமி தேவியார், நிருபம் ஒன்று தீட்டியிருக்கிறார், 'டைம்ஸ்' எனும், ஏட்டுக்கு.

நியாயமல்ல,—என்று, அந்த நிருபத்தில், எடுத்து விளக்கியிருக்கிறார், கோவா கொடுமையைத்தான், நியாயமல்ல என்று தேவியார் கண்டித்தாரோ, என்பீர்—அல்ல. அதைவிட அவசரமான பணி, அவருக்கு வந்துவிட்டது. அண்ணனார் பண்டித நேருவைப் பற்றிப்பலப்பலஎழுதுகின்றனவாம் பத்திரிகைகள்—என்னய்யா உலகத்துக்கே சமாதானம் போதிக்கிறார்? அவருடைய நாட்டில் ஏன் இப்படி அல்லல்! எதையும் கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்கிறாரே.— இந்தப் பிரச்னையைக் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியவில்லையா? கலவரத்துக்குக் காரணமே, அவர்தானாமே. கோவாவுக்குள் படையோடு நுழையும் முதல் நடவடிக்கையாமே இது-இப்படிச் செய்யலாமா, அவர்? இறந்தோர் எண்ணிக்கை, திடுக்கிடத்தக்க வைப்பதாக இருக்கிறதே.—என்று ஏடுகள், எடுத்துரைக்கின்றனவாம், வெளிநாட்டில். இந்திய மண்ணிலுள்ள கோவாவில் ஆக 15ல் நடைபெற்ற அறப்போருக்கு, பண்டித நேருவே காரணம் என்று கூறுகின்றனவாம், அவைகள். அந்தக் கூற்றுக்களைத்தான் மறுக்கிறார், தோழியர், அந்த நிருபத்தில்—தலைப்பில் தந்துள்ளதுபோல, விளக்கங்கள் வேறு அளித்துள்ளார்.

இன்றல்ல. எப்போதும்.

இங்கல்ல. எங்கும்.

என்று, எடுத்துரைத்திருக்கிறார், அந்தக் கடிதத்தில். உலக மார்க்கெட்டில் உன்னதமாகப் பவனி வருவதாக எல்லோரும் கருதிக் கொண்டிருக்கும்போது, இப்படி ஏடுகள் கண்டபடி, பொழியக் கிளம்பினால்........அம்மையாருக்கு, ஆத்திரம் வராமலா இருக்கும். அதுவும் அண்ணனால் 'பாக்கியங்கள்' பெறும் தங்கைக்கு.

அதனால், எடுத்தார்பேனா; தீட்டிவிட்டார், கடிதம்.

"எழுச்சி பெற்று எழுந்தது மக்களே தவிர, அந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணம், இந்தியப் பிரதமர் அல்ல" என்று எடுத்துரைக்கிறார்.

இந்தக் கவலை ஏன் வந்தது, அவருக்கு; நேருதான், சுதந்திரக் கொடியைத் தூக்கிக் கொடுத்தவர்—என்று சொன்னால், என்ன.

அந்தப்புகழைப் பெறுவதற்காக, சுபத்ரா, குண்டை ஏந்துகிறார்—ஆந்திரக் காளைகள் இருவர் பலியாகின்றனர் — மராட்டிய மாதர்கள் பலர் மஞ்சள் குங்குமம் இழக்கின்றனர்—நாடெங்கும் பலஇடங்களிலே அழுகுரல், ஓலம்.

ஆனால், தேவியார் மறுக்கிறார்—சுதந்திரப் போரில் முதல் ஆள், என்று தோள் தட்டியதோர் காலம். 'இல்லை, இல்லை' என்பது ஓர் காலம். அன்று, அவர் தொண்டர்; இன்று உலகத் தலைவரல்லவா.

உலகத் தலைவர், சமாதானச் சிற்பி எனும் பட்டங்களுக்கு ஊறு வந்துவிடுமோ—ஒரு 'அந்நிய' எல்லையில் மக்களைக் கொண்டு போய்க் குவிக்கத் தூண்டியவர் அவர்தானோ எனும் ஐயம் பரவுமோ—அது, அவர் கீர்த்தியைக் குறைக்குமோ எனும் அச்சத்தால் அயல் நாட்டு ஏடுகளின் குறிப்புக்கு மறுப்பு எழுதுகிறார், தேவியார்.

நிலைமை பொறுக்காமல், "நடவடிக்கை எடுங்கள்" என்று சொல்லியும், சாத்வீகம், சமாதானம், சமரசம் என்று அன்புநாதம் பொழிந்து வருகிறாராம், நேரு. அவரையா இப்படி எழுதுகிறீர்கள், எனக் கேட்கிறார், விஜயலட்சுமி.

உலக சமாதானத்தில், அவருக்கு இருக்கும் அக்கறை என்ன; எட்டு ஆண்டுகளில் அவர் காட்டி வரும் நிதானம் எவ்வளவு. அமைதிக்காக அவர் பட்டுவரும் பாடு எத்தனை — என்று கேட்கிறார், விஜயலட்சுமி.

அவர் அங்கே; பண்டிதநேருவோ இங்கே சிதாபுரியிலும், டில்லி பார்லிமெண்டிலும் பேசும்போது, "சாத்வீகம், சமரச முறைகளில் தான் கோவாவுக்கு விடுதலை பெற வேண்டும்" என்பதே என் நோக்கம் என்கிறார்.

பெறட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை.

ஆனால், ஏதோ ஒரு 'பாபகாரியம்' செய்வதுபோலவும் — இதுவரை இப்படி ராணுவங்களை ஏவிவிடும் காரியத்தைச் செய்யாதவர் போலவும்—இங்கே இவரும், அங்கே தங்கையும் விளக்கமளிக்கிறார்களே அதுதான் ஆச்சரியத்தை அளிக்கிறது.

இன்றல்ல, எப்போதும்,—சமாதான முறைகளையே, எட்டாண்டுகளாகக் கடைப்பிடித்து வருகிறாராம், நேரு.

"அப்படியானால், அம்மையே, ஏழெட்டு ஆண்டுகளாக காஷ்மீர்க் களம் ஏற்பட்டுக்கிடப்பது ஏன்? பலர் உயிரிழந்தது இல்லையா? பணவிரயம் இல்லையா? இந்திய உபகண்டத்துக்குள்ளிருக்கும் ஐதராபாத்மீது போலீஸ் நடவடிக்கை எடுத்தீர்களே—ராணுவத்தைக் கொண்டு அதற்கென்ன பெயரோ?" என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்ற எண்ணம் போலும், எழுதுகிறார், தங்கை; முழக்குகிறார் அண்ணன்.

★

ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்கள் தங்கள் பாக்கியை ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதிக்குள் அனுப்பித் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். பட்டியல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் பாக்கி முழுவதும் அனுப்பத் தவறுபவர்களுக்குப் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி
"திராவிட நாடு"

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 28—8—55 [ஞாயிறு

ஆகட்டும்! கவனிக்கிறோம்!!

———

"ஆகட்டும்!" "கவனிக்கிறோம்!" என்று பதிலளிப்பது, எளிதான காரியமாகிவிட்டது அமைச்சர்களுக்கு! ஆனால், அப்படிக் கொடுத்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றுவதில்லை!—என்று, அதற்காக நியமனம் செய்யப்பட்ட சட்டசபைக் கமிட்டி யொன்று, அண்மையில் கண்டுபிடித்து, முடிவை வெளியிட்டிருக்கிறது! நிதியமைச்சரும் அக் கமிட்டியில் ஒரு உறுப்பினராம்!

சட்டசபையில் 15 நாளில் எத்தனை உறுதி மொழிகள் கொடுத்தார்கள், அதில் எத்தனை நிறைவேற்றப்பட்டன என்று கணக்கெடுத்து பார்த்த பொழுது 198 உறுதிகள் தரப்பட்டதாகவும் மாதங்கள் இரண்டாகியும் 22 மட்டுமே கவனிக்கப்பட்டதாகவும், வெளியாகியிருக்கிறது. அவ்வளவு, சிரத்தையின்மை என்பது மட்டுமல்ல, அவரவர்களுக்குள்ள 'பலவித' சுமைகளில், பொறுப்புகளை உணரும் வாய்ப்பு குறைந்துகொண்டு வருகிறது என்பதே இதன் ரகசியமாகும்!

"கவனிக்கிறோம்!", "கவனிக்கிறோம்!!', சட்டசபை உறுப்பினர்களிடமும், மக்களின் மகஜர்களைப் பெறும் போதும் சொல்வது சுலபம், ஆனால், அதைக் கவனத்தில் வைத்திருந்து, நிறைவேற்றவேண்டுமென்பதில் சிரத்தையிருந்தால் மட்டும் போதாது-குறைகளைப்பரிசீலிக்கும் திறமையும் வேண்டும்.

ஜனநாயக ஆட்சியில், திறமையற்றோர் கூட செங்கோலை ஏந்த நேரலாம். ஆனால், பொறுப்புணர்ச்சியும், செயலாற்றும் ஆர்வமும் இருந்தால் திறமையுள்ளவர்களாகலாம்; அந்த உணர்ச்சியும் ஆர்வமும், 'ஊர் சுற்றுவதிலும் உபசார வரவேற்புகள்' பெறுவதிலுமே கழிகிறது போலும், நமது காங்கிரஸ் அமைச்சர்களுக்கு.

அதனால்தான், இந்தவாரம் சட்டசபையில் ஒரு உறுப்பினர், 'ஏன் மந்திரிகள் டீகடை திறப்புவிழா உட்பட ஒன்று விடாமல் கலந்து கொள்கிறார்கள்,' என்று கேட்டிருக்கிறார்; 'பிரயாணப் படிக்காகவா?' என்று கேட்கும்போது விரசமாயிருக்கலாமே ஒழிய, ஆட்சி முறையில் ஊக்கம் குறைகிறதென்பதை உணரும் எவரும் வருந்தவே செய்வர்!

ஆட்சியாளர்களின் திட்டங்களும், அவர்தம் கொள்கைகளும் அரசியல் கட்சிகளின் விமர்சனத்துக்குரியவைகளாக இருக்கலாம். ஆனால், அமைச்சர்களின் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் விமர்சிக்குமளவுக்கு நிலைமை வளர்கிறதென்றால், அது பரிதாபப் படக்கூடிய விஷயமே.

அதுமட்டுமல்ல, அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கும் அமைச்சர்கள், எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு இரசமான சம்பவம்—நகைச்சுவைக்கு அல்ல; சிந்தனைக்கு.

சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி—அவரை, சபையில் ஒரு உறுப்பினர் கேள்விகேட்டபோது, "எனக்கு இந்த மந்திரம், தந்திரம், விஷக்கடி, தண்ணீர் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கும் வித்தை ஆகியவைகளில் நம்பிக்கை கிடையாது" என்றார்.

அது, அவர் சொந்தக் கருத்தாகக் கூட இருக்கலாம். ஆனால், அதைத் தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "தண்ணீர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில், சர்க்காரில் யாரும் இல்லை" எனும் கருத்துடன் பதிலளித்துள்ளார்.

ஆனால், அதே கேள்விக்கு வேறோர் நாள், சட்டசபையில், விவசாய அமைச்சர் பக்தவத்சலம் பதில்ளிக்கிறார், "சர்க்காரில், நீர் ஊற்று கண்டு பிடிக்கும் நிபுணர் இருக்கிறார்" என்பதாக. அவர் எத்தனை ஊற்றுக்களைக் கண்டுபிடித்தார், அதன் விபரம் என்ன, என்றெல்லாம் தெரிவிக்கிறார்.

சபையில் ரஜாகான் என்ற உறுப்பினர் உடனே, 'அப்படி அந்த மந்திரி தெரிவித்தார், இப்படி நீங்கள் தெரிவிக்கிறீர்களே' என்று கேட்க, "ஒரு வேளை, சுகாதார இலாகாவில் அப்படியொருவரும் இல்லாமலிருக்கக் கூடும்!" என்று பதிலளித்துள்ளார், பக்தவச்சலம். பதிலில் சாதுர்யம் வேண்டுமானால் இருக்கிறதென்று கூறலாமே யொழிய, உண்மை யாருக்கும் விளங்கும்!

இப்படி 'தொடர்பு' இருக்கிறது, ஒவ்வொருவருக்கும். இதனால், ஒவ்வொரு அமைச்சரும் இன்னொரு அமைச்சரின் இலாகாவில் போய்க் குழப்ப வேண்டும் என்பதல்ல!—அது நடவாமலிருக்கிறதோ! என்னவோ!—ஆனால், கூடிய வரையிலாவது மக்கள் பிரதி நிதிகளுக்கு தகவல் தரத்தக்க அளவுக்காவது அவர் தம் ஊக்கமும் முயற்சியும் இருக்க வேண்டாமா?

அழகுள்ள பொருளாக யிருக்கலாம். அது மனதை மயக்கக்கூடியதாகக்கூட இருக்கலாம். அதனால், மணமில்லாமலிருந்தால், மதிப்பரோ பிறர்? அல்லியும், மயிலும், அழகுக்குக் கூறப்படும் உவமானங்கள்தான், ஆனால், அவைகள் பிரயோசனமற்றவை யன்றோ பிறருக்கு. அதுபோல, நல்லாட்சி என்பது, புகழும் பெருமையும் அதிகரிக்கும் விதத்தில், திட்டங்கள் தீட்டி அமுல் செய்வதுதான்.

அப்படி திட்டங்கள் தீட்டி, புதுமைகளை மலர்விக்கும், சக்தியிலாவிடினும் இருக்கிற வண்டியை சிறப்பாகப் பிறரின் ஏளனத்துக்கு ஆளாகாமல் ஓட்டிக்கொண்டு போவதுதான்.

அதற்கு, "கவனிக்கிறோம்! கவனிக்கிறோம்!!", என்று கூறிவிட்டால் மட்டும் போதாது. குறைகளையும், மகஜர்களையும், கூடிய வரையிலாவது கவனித்து-அவைகள் நிறைவேற்றப் படுகிறதா என்று கண்காணித்து-செயலாற்றவேண்டும். அப்படி நடக்காததால்தான் தோழர் கந்தசாமி தலைமையில் நியமிக்கப்பட்ட சட்ட சபைக் கமிட்டி, "அமைச்சர்களால் அளிக்கப்பட்ட பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை", என்கிற முடிவுக்கு வந்திருக்கிறது.

★

வருந்துகிறோம்

சுயமரியாதை இயக்கத்திலே நீண்ட நாட்களாக பற்று கொண்ட வரும், கோமளீசுவரன் பேட்டை வட்டத்தில் திராவிட கழகத் தலைவராக இருந்தவரும், வட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தவருமான தோழர் எம். எஸ். முகமது மொய்தீன் அவர்கள் 22—8—55 இரவு 1-மணி சுமாருக்கு இயற்கை எய்தியது கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

மார்க்ஸின் வாக்குப் பலித்திருக்க வேண்டியது இங்கிலாந்துபோன்ற நாட்டில்—விவசாயமே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்த ரஷ்யாவில் அல்ல.

வர்க்கப் போர்தான் புரட்சிக்கு காரணம் என்ற கூற்றுப் பொய்யாகிறது. சாதகமான சூழ்நிலைகள் எங்கு உண்டோ அங்கு புரட்சி ஏற்படும் என்பது தெரிகிறது. சிறுவில் முதலாளி-தொழிலாளி வர்க்கங்களின் போராட்டத்தின் விளைவல்ல, அங்கு ஏற்பட்ட புரட்சி. அங்கிருந்த ஆட்சியின் அலங்கோலம் மக்களைக் கொதித்தெழுந்து ஆட்சியைக் கைப்பற்றச் செய்தது.

ஆக வர்க்கப்போர் அல்லது முதலாளி தொழிலாளி தகராறு இன்றியே புரட்சி ஏற்படலாம் என்று தெரிகிறது.

அதுபோலவே முதலாளி, தொழிலாளி என்ற வேற்றுமைகள் இங்கிலாந்தில் சென்ற நூற்றாண்டில் இருந்ததுபோல மலிந்திருந்தாலும் வர்க்கப் பகையை வளரவிடாமல், புரட்சிக்கு வித்திடாமல், சமரச முறையில், சட்டரீதியில் சீர்திருத்தங்களைப் புகுத்தி முதலாளிகளின் பலம் குறையவும், தொழிலாளரின் வாழ்வு வளம் பெறவும் செய்யமுடியும் என்பது ஆங்கிலேயர் வரலாறு தரும் சான்றாகும்.

அப்படியே பாட்டாளிகளின் சர்வாதிகாரம் பொதுவுடைமை ஏற்பட்டதும் மறைந்து விடுகிறதென்றே வைத்துக்கொள்ளுவோம்—விவாதத்திற்காக. பொருளாதாரத்தில் சமத்துவம் ஏற்பட்டுவிட்டது. அரசுக்கு அவசியமில்லாததால் அதுவும் மறைந்துவிட்டது. அரசு என்னும் ஆணையிடும் அமைப்பு இல்லாத நிலையில் மக்கள் மார்க்ஸ் எதிர்பார்த்த விதத்தில் நடந்து கொள்ளுவார்களா?

மார்க்ஸ் அந்தநிலையில் மக்கள் தங்களுக்குள்ளே பொறுமையையும் பூசலையும் விட்டு விடுவார்கள், பதவிப்பித்து பறந்துவிடும், சேவையில் ஆர்வம் ஏற்படும், அவர்களுக்குள் ஆங்காங்கு சுதந்தரமாக ஒப்பந்தம் செய்துகொண்டு வாழ்வார்கள் என்று எதிர்பார்த்தார். ஒருதடவை சமத்துவத்தை ஏற்படுத்திவிட்டால் அந்தச் சமத்துவம் நீடித்திருக்கும் என்று எண்ணினார். மக்கள் தங்கள் இயற்கையான சுயநல நாட்டத்தை மறந்து, பொது நலத்திற்காகப் பாடுபடுவார்கள், அதாவது தங்கள் இயற்கைக் குணத்தையே மாற்றிக்கொள்வார்கள், பொதுவுடைமை பூத்த உடன் என்று நினைத்தார்.

மக்களுடைய இயற்கையான சுபாவத்தை இவ்விதமாக மாற்றி அமைப்பது இயலாது என்று இயற்கை ஆராய்ச்சியாளர் கூறியிருப்பது ஒருபுறமிருக்க, அது சாத்தியமானதென்று வைத்துக் கொண்டால், புரட்சி ஏன், போராட்டம் எதற்கு? கொலை, கொள்ளை, இரத்தக்களறி ஒன்றும் இல்லாமலேயே மக்களுடைய மனதைப் பக்குவப்படுத்தி அவர்களுடைய இயற்கையான துர்க்குணங்களைக் கட்டுப்படுத்தி சமாதானமுறையில் சமத்துவத்தை ஏன் ஏற்படுத்தக் கூடாது?

உலகில் பல இலட்சியங்களிருக்கின்றன. ஜனநாயக அமைப்பை வைத்துக் கொண்டே பாட்டாளிகளின் வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பது ஒரு சிலரின் விருப்பம். கூட்டுறவு முறையில் சிறு சிறு தொழில்களை நாட்டில் ஏற்படுத்தி, பெருந்தொழில் ஆலைகளையெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்தி சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது வேறுசிலரின் ஆசை. எல்லோருக்கும் வாழ வழிசெய்து வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத விபத்துகளிலிருந்து எல்லோருக்கும் பாதுகாப்பளித்து, அதிக வருமானமுடையவர்களின்மேல் அதிகமதிகமானவரிகளைச் சுமத்தி, மேட்டைக் கரைத்துப் பள்ளத்தை நிரப்பி சமத்துவத்தை ஏற்படுத்துவது ஒரு சிலருடைய இலட்சியம்.

இப்படிப் பல இலட்சியங்கள் உலகில் உலவும்போது, பொதுவுடைமைக்காரர்கள் மட்டும் தங்களுடைய இலட்சியந்தான் சர்வதேசத்துக்கும் சஞ்சீவியென்று அதை நேரடியாகவும், மறைமுகமாகவும் கண்டிக்கக் கூடிய முறைகளிலும் கூட மற்ற நாடுகளில் நுழைவதற்கு வழிதேடி ஆங்காங்கே புரட்சிக்குப் பாதை வகுப்பது, அதற்காக ரஷ்யாவில் ஒரு தனி ஸ்தாபனம் கோமின்பார்ம் என்று வைத்து நடத்துவது, நாளடைவில் இலட்சியப்போருக்கே கொண்டுவந்துவிடும். தங்கள் இலட்சியமே உலகிற்கு உகந்தது என்று பிடிவாதம் செய்வது இலட்சியத்தில் சர்வதேச சர்வாதிகாரம் கொண்டாடுவதற்கு அவர்கள் செய்யும் முயற்சியாகும்.

தொழிலாளர் படும் அவதியை எடுத்துக் காண்பித்து, உழைப்பவன் உழைத்து உழைத்து உருக்குலைய, முதல் போட்டு மேல் பார்வை பார்ப்பவன் இலாபத்தையெல்லாம் தனக்காக்கிக்கொள்வதைக் கண்டித்து, உழைப்பவனும் வாழ வேண்டும் என்று வலியுறுத்தியவரையில் மார்க்ஸ் உலகிற்கு சிறந்ததொரு சேவை செய்திருக்கின்றார். அவருடைய நாட்களில் இருந்த சூழ்நிலையில் வர்க்கப்போரும் புரட்சியும் அவருக்குத் தவிர்க்கமுடியாததாகத் தோன்றியதிலும் வியப்பில்லை. ஆனால் காலம் மாற மாற கருத்துக்களும் மாறவேண்டும் மாறிய சூழ்நிலையில் எது சுலபத்தில் சாத்யமானதோ, சமூக நீதிக்குட்பட்டதோ அந்த முறையைப் பின்பற்றவேண்டும்.

மார்க்ஸ் வழி காட்டியிருக்கிறார். அந்த வழிதான் ஒரே வழி, எக்காலத்துக்கும் அதே வழி என்று கூறுவது மாறின சூழ்நிலைக்கேற்பக் கருத்துக்களை மாற்றிக்கொள்ள விருப்பமில்லாத வீண் பிடிவாத எண்ணம். மார்க்ஸினுடைய கொள்கையைத் தாங்கள் தான் பின்பற்றுவதாகவும் மற்றவர்களெல்லாம் மார்க்ஸைப் புரிந்துகொள்ளாதவர்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் நினைப்பதும் இந்த எண்ணத்தால்தான்.

—தொடரும்

தம்பி,

முத்தனையார் வரம் பழித்தோர்
முதுகுரவர்க்கு இடர் புரிந்தோர்
முக்கண்ணனை, நந்தனை, நான்முகத்
தோனை இகழ்ந்தோர்
பல்லுயிர் செகுத்தோர்
நன்றி கொன்றோர்
கந்தனைவிட்ட மர்க்களத்திலோடினோர்,
நம்பினர்க்குக் கபடம் செய்தோர்
எந்துணைப் பாதகரேனும்
வட அருவி படிந்தவர்
வீடு எய்துவர்!

இது தெரியாது எனக்கு, இங்கு புறப்பட்டபோது; தெரிந்திருந்தால், வேறு சிலருக்கு முன் கூட்டியே 'சிபாரிசு' செய்திருக்கலாம்; இங்கு வந்து 'தலபுராணம்' படித்தபோதுதான், இது இத்தனை பெரிய 'பாவமன்னிப்பு' இடம் என்பது தெரிந்தது! பாவம் செய்தவர்களுக்கே, கறைகழுவி விடப்படுகிறது என்றால், பாவி என்று பாதகர்களால் ஏவிவிடப்பட்ட பாமரரால் தூற்றப்படுபவர்களுக்கு பலன் நிச்சயமாகக் கிடைக்கத்தானே செய்யும்! இங்கு, நான் பலர் குளித்துக் குதூகலிப்பதைக் காண்கிறேன், காவி உடையும் பொன்னிற மேனியும், கருத்துச் சுருண்டு கவர்ச்சிகரமாகக் காட்சி தரும் தாடியுடன் கூடிய 'தருமபுர'த்தையும் காண்கிறேன், துள்ளித் திரியும் பருவத்தினர், துவண்டு போகும் நிலையினர், தொங்கு சதையினர், தோலால் எலும்புக் கூட்டினைப் போர்த்திருப்போர், சீமான்கள், அவர்களைச் சீமான்களாக்கியதால் சீரழிந்து கிடப்போர், மதி முகவதிகள், அது அற்ற நகைப்பொதிகள், பலர், பலப்பலர்! அனைவருக்கும், இன்பம் அளித்திடும் அந்த அழகிய அருவி; என்றென்றும் இதே வள்ளற்றன்மையோடு இருந்திடுவதாக என்று வாழ்த்துவதுடன், நம் திருவிடத்தில் என்னென்ன இயற்கை எழில் காணக் கிடக்கிறது என்பதை எண்ணி எண்ணிப் பூரிப்படைகிறேன்.

தலபுராணம் எத்துணையோ இடங்களுக்கு இருக்கத்தான் செய்கிறது. படிப்போர், அகமும் முகமும் மலர்ந்து, நந்தம் நாட்டின் சிறப்புத்தான் என்னே! இத்துணை இடங்கள் உள்ளனவே பாவங்களைப் போக்க, என்று இறும்பூதெய்துகின்றனர்—தம்பி—நான் உள்ளபடியே வெட்கப்படுகிறேன், வேதனையுமடைகிறேன் — இவ்வளவு இடங்கள் தேவையாக இருக்குமளவுக்கா இங்கு பாபம் மலிந்து குவிந்து வளர்ந்து கிடக்கிறது என்பதை எண்ணிடும்போது. தத்தமது பார்வைக்குக் கொண்டு வரப்பட்ட இடங்களை, விளம்பரப்படுத்தும் முறையில், தல புராணங்களை ஆக்கினரே யன்றி, பிற எந்த நாட்டுக்கும் தேவையில்லாதிருக்கும்போது, இங்குமட்டும் ஏன் இத்தனை, பாபம் போக்கும் பதிகளும் நதிகளும்? இங்குள்ளோர், பாவச் செயல்களில் விடாமல் ஈடுபட்டுக்கிடக்கும் இழி தன்மையிலா உளர் என்பது பற்றி எண்ணிப் பாராதாரில்லை. ஏனோ?

*

"ஐயா! உம்மை போட்டோ எடுக்கப் போகிறேன்."

"என்னையா? ஏன்..."

"ஏன் என்பது கிடக்கட்டும். போட்டோ எடுத்துக்கொள்வதாலே உமக்கென்ன நஷ்டம், கஷ்டம், பணம் தரவேண்டாம்; இலவசமாகவே போட்டோ எடுத்துத் தருகிறேன்."

"இலவசமாக!.......ஆச்சரியமாக இருக்கிறதே..."

"நேரமாகிறது.........அப்படியே அந்த மரத்தடியில் நில்லு...இதோ பாரும்...சட்டையைக் கழட்டிவிடும்..."

"சட்டையைக் கழற்றிவிடுவதா? ஏனய்யா! சட்டை நன்றாகத்தானே இருக்கிறது..."

"அடா அடா! பெரிய தொண தொணப்பு ஆளாக இருக்கிறீரே, சட்டையில்லாமல் தானய்யா போட்டோ எடுக்கவேண்டும்... இதோ பாரும்......ஊரெங்கும், நாடெங்கும்...உன் போட்டோவை ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் அச்சிட்டு ஒட்டப் போகிறோம், தெரிகிறதா! எங்கும் உன் போட்டோ! மதில் சுவர்களில், மாட மாளிகைகளில், கடைவீதிகளில், வண்டி வாகனங்களில், சினிமாக் கொட்டகையில், சிங்காரப் பூந்தோட்டங்களில், எங்கும் உன் போட்டோ இருக்கும்..."

"புரியவில்லையே.....சரி......நான் போட்டோ எடுத்துக்கொள்ள மாட்டேன்..."

"பத்து ரூபாய் இனாம் தருகிறேன்..."

"உஹும்......முடியாது......என்னமோ சூக்ஷமம் இருக்கிறது, ஐம்பது கொடுத்தால்தான் நான் ஒப்புக்கொள்வேன்"

"பேராசைக் காரனய்யா நீர்! இருபது தருகிறேன்..."

"ஐம்பதுக்குச் சம்மதமானால் பேசு...இல்லையானால் போகலாம்...."

"சரி! சரி!...கழற்று சட்டையை ...கைகளைத் தொங்கவிடய்யா,...

போதும்...சிரிப்புக் கூடாது... சும்மா பாரும் போதும்..."

போட்டோ எடுக்கப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு எங்கு பார்த்தாலும் விளம்பரத்தாட்கள்! போட்டோ படத்தின்கீழ்......இப்படிப்பட்ட கடுமையான குஷ்ட ரோகியும் எமது குஷ்ட விநாசனி தைலம் பூசிக்கொண்டால் முப்பது நாளில் பொன்னிற மேனி பெறுவர்!—என்று விளம்பரம் காணப்பட்டது. ஐம்பது ரூபாய் பெற்றுக் கொண்ட அப்பாவியை அவனுடைய நண்பர்களே கூட 'குஷ்டரோகி' என்று எண்ணி ஒதுக்க ஆரம்பித்தனர்!!

*

மருந்து விளம்பரத்துக்காக, அப்பாவியைக் குட்ட நோயாளனாக்கிக் காட்டியதுபோல, ஆறுகளுக்கும், திருக் குளங்களுக்கும, சோலைகளுக்கும் ஊர்களுக்கும் கீர்த்தியை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக 'தலபுராணங்கள்' புனையப்பட்டன! அதனால், அந்தத் தலங்களின் மகிமை தெரிவதைவிட, விளக்கமாக, பாவச்செயல் புரிவோர் இவ்வளவுமிகுந்திருக்கிறார்களா, என்று எண்ணித்தான் நம்போன்றோர் ஆயாசப்படவேண்டி இருக்கிறது.

பாரேன் தம்பி, துவக்கத்தில் உள்ள பாடலை, பாவங்களின் பட்டியலைக் கொடுத்து, இவ்வளவு பாபங்களையும் போக்கும்பதி இது என்று கூறப்பட்டிருக்கிறது.

பாவங்களைப் போக்கிடும் என்று மட்டும் கூறினால் போதாது, என்றெண்ணி, 'தலபுராணக்காரர்' எல்லாப் பருவத்தினரின் பாபமும் போக்கப்படும் என்று வேறு கூறுகிறார்.

அறியாமல் இளமையில் செய்
பாவமெலாம் நண்பகலில் ஆடத்தீரும்!
காளையராய் மனதறியச் செய்த
பாவம், சிறுகாலை படிந்திடில் போம்!
வறிதான புன்மாலை படிந்தார்க்கு
முதுமையில் செய்மாபாவம் போம்!!
முப்பொழுது ஆடில், எழுபிறப்பும்
பெயர்க்கும்!!!

இவ்வளவு மகிமை கூறப்பட்டிருக்கும் குற்றாலத்தில் இருந்து கொண்டு இதை எழுதுகிறேன், தம்பி!

இருந்துகொண்டு என்றால்' சாதாரணமாகவா!

சிங்கம்பட்டி ஜெமீன்தார் மாளிகையில் இருந்துகொண்டு எழுதுகிறேன்.

அழகான மாளிகை! நான் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கும் கூடம், 'தர்பார்' நடத்துவதற்கான இடம்! ஜெமீன்தாரரின் உருவப் படங்கள் என்னை நோக்கியபடி!! நுழைவுவாயலில், அவர் புலியுடன்—யானையுடன்—இருக்கிறார்—படங்கள்—வேட்டையில் அவர் சாகடித்தவை!

ஏதேது! அண்ணனுடைய நிலை 'ரொம்ப ரொம்ப' உயர்ந்துவிட்டது போலிருக்கிறது, சிங்கம்பட்டி ஜெமீன் அரண்மனையிலல்லவா இருக்கிறார், என்று எண்ணிக்கொள்வாய், தம்பி, என் நிலை உயர்ந்துவிடவில்லை, சிங்கம்பட்டி ஜெமீன் நிலை அவ்விதமாகிவிட்டது!!

சிங்கம் பட்டியின் இந்தச் சிங்கார மாளிகை போடிநாயக்கனூருக்கு வந்து சேர்ந்து, இப்போது ஒருவர் மொத்த வாடகைக்கு எடுத்து, 'சீசனின்'போது, அன்றாட வாடகைக்கு விடுகிறார், அந்தமுறையில், இந்த மாளிகையின் ஒரு பகுதியை நாளொன்றுக்கு நாலு ரூபாய் வாடகைக்கு என் நண்பர் மதுரை டாக்டர் அருணாசலம் எடுத்திருக்கிறார், அவருடைய விருந்தினன் நான்! புரிகிறதா உன் அண்ணனுடைய நிலை உயர்ந்ததன் காரணம்!!

கட்டினால் என்ன, கட்டிடத்தில் தங்கியிருந்தால் என்ன, இடம் எழில் நிரம்பியதாக இருப்பதால், களிப்பூறத் தான் செய்கிறது, இங்கு நின்று பார்த்தால், எதிரே தெரியும் சிறு குன்று, பச்சைப்பசேலென்றிருக்கிறது, அந்த பச்சைப் பட்டாடை அணிந்த பாவைக்கு முத்தாரம்போல அருவி! காலையில் நீர்வீழ்ச்சி! மாலையில் மக்கள் எழுச்சி!! காலையில் குளிக்கிறேன்! மாலையில் களிப்படைகிறேன்! காலையில், மலையும் அதன் பசுமையும், அருவியும் அதன் குளிர்ச்சியும், என்னிடம் ஏதேதோ பேசிடக்கேட்கிறேன் — மாலையில், இத்தகைய இன்பக் காட்சிகளின் இல்லமாக உள்ள தாயகத்தின் நிலைபற்றி மக்களிடம் நான் பேசுகிறேன்!!

செந்நெல்லுக்கு வரப்பு, வாழை!
வாழைக்கு வரப்பு, கரும்பு!
கரும்புக்கு வரப்பு, கதலி!
கதலிக்கு வரப்பு, கமுகு!
கமுகுக்கு வரப்பு, தாழை!

தம்பி, குற்றாலம்பற்றிய படப்பிடிப்பு இது! காண்போருக்கு கவிதை வடிவில் உள்ள காட்சி, அப்படியே தெரியத்தான் செய்கிறது.

வளம் கொஞ்சும் இடம் இங்கு குறிப்பிடத்தக்க அளவுள்ள வயல், குற்றால நாதருக்கும் குழல் வாய்மொழி அம்மைக்கும் சொந்தம்!

இந்த வயலின் செல்வம், தக்க முறையிலே 'குத்தகை, விடப்படாததால், முழுவதும் நாதனுக்குச் சேருவதில்லையாம்!!

பூ! பூ! குத்தகை முறையிலே குற்றம் கண்டுபிடித்து விட்டார்களோ, குறும்பர்கள்!! நமது ஆதீனத்துக் குத்தகை முறையினை அறியின் இம்மாந்தர் இதனினும் அதிகமாகக் கூடக் கண்டிப்பர்! ஆயினென்! இவர்தம் கண்டனத்துக்காக, எமது முறையினை மாற்றிக்கொள்ளவா இயலும், என்று கூறுபவர் போல, 'தருமபுரம், நீர்வீழ்ச்சியில் குளித்திடக் காண்கிறேன்! மூவர் உடனிருக்கிறார்கள், அவருக்கு 'சேவை' புரிய—அவரோ காக்கி உடையற்ற, ராணுவ வீரர் போலவே, அந்தவழுக்குப் பாறைகளிலும், கூழாங்கற்களிலும் நடந்து செல்கிறார்? ப்யூக்கார் காத்துக்கொண்டிருக்கிறது அவருக்காக!! முறை மாறித்தான் விட்டது! ஆனால், அவருக்கு நலன் அளிக்கும் துறையில் மட்டும்தான்! அரன் அருளை, ஆயிரக்கணக்கான வேலி நில உருவில் பெற்றுவாழும் ஆதீனகர்த்தா, அவருடைய, 'இரும்புப் பல்லக்கில், ஏறுகிறார், திருவருள் கண்டதும் கடுவேகத்துடன் காமக்குரோத மதமாச்சாரியாதிகள் பறந்து செல்கிறதாமே அதுபேர்ல, 'ப்யூக், செல்கிறது. போகட்டும்!! இதோ நீர்வீழ்ச்சி!!

வேகம் குறைவு, சாரல் சுகம் அவ்வளவு இல்லை, தண்ணீரின் அளவும் குறைவு என்கிறார் பொன்னம்பலனார்—அவருக்குக் குறைவாக இருப்பது, எனக்கு அதிகமாகத்தானே இருக்கும்! என் உடல் சிவந்து விடுகிறது—தம்பி சம்பத் பொன்குன்றாக இருக்கிறான்!!

எல்லோரும் குளிக்கிருர்கள்! களிப்புடன் விடுதி செல்கிருர்கள்! மீண்டும் வந்து குளிக்கிருர்கள்! மீண்டும் மகிழ்ந்து விடுதி செல்கிருர்கள்!! மீண்டும் குளிக்கிருர்கள்!!

ஐந்தருவி எனும் இடத்தில் அதிகக் கூட்டம் இராது என்றனர்—ஆனல் அங்கும் பெரிய கூட்டம் குவிந்து விட்டது—சாரல் முடிகிற நேரமாம், எனவே சந்தர்ப்பத்தை இழந்துவிட மனமில்லாதவர்கள், ஒவ்வொரு நாளும், பல்வேறு இடங்களிலிருந்து வந்த வண்ணம் உள்ளனர்!

சேல் குதிக்கும் மலர்ச் சோலை! தேன் குதிக்கும் நான்கு திக்கும்! — என்று கூறப்பட்டிருப்பது, மொழியின் அழகுக்கு மட்டுமல்ல, இடத்தின் எழிலுக்கு முற்றிலும் பொருத்தந்தான்! எரிமலை இல்லை, நீர்வீழ்ச்சி உண்டு! பாலைவனம் இல்லை, சோலைவனம் எங்கும்!!—திருவிடம் இப்படியல்லவா இருக்கிறது. சொக்க வைக்கிறது காண்போரை, அதன் நிலையை எண்ணிடும் போதோ நெஞ்சு நோகிறது.

தம்பி இங்கு உட்கார்ந்து கொண்டு, எழிலைப்பருகி இன்புற்று இருக்கும்போதுதான், ஏடா! மூடா! இதுதான திராவிடம்! இதோ பார், உன் திராவிடம்! என்று இடித்துக் கூறுவதுபோல, நாளிதழ்கள் காட்டுகின்றன, முதலமைச்சர் காமராஜரும் நிதி அமைச்சர் சுப்பிரமணியனும், டில்லி சென்று, 400 கேட்டு 200 பெற்று, திரும்பிய சோகக் காதையை!!

கொற்றம் நம்மிடமில்லாதால், நமக்கு இழைக்கப்படும் கொடுமை இங்ஙனம் உளதன்ரோ, என்று எண்ணிடும்போது, குற்ருலத்துக் குளிர்ச்சியும், உள்ளத்து வெப்பத்தைப் போக்கிட இயலாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

"என்னைக் குறை சொல்லாதே மகனே, நான் உனக்கு எல்லாம் அளித்திருக்கிறேன். இதோ பார், என் அன்புப் பெருக்கு" என்று தாயகம் கூறுவதும் தெரிகிறது—அருவி வடிவில், சேதியோ, செந்தேளாகிறது.

வண்டாடு மலர்க் கூந்தல் வாராடுங்
கபள முலை
கண்டாடு மாதர் இதழ், கனியாடு மதுர
மொழி
விண்டாடும் கிளிப்பிள்ளை வியந்தாடும்
மடப்பூவை
கொண்டாடும் குயிற்பேடை கூத்தாடும்
பசுந்தோகை.

குற்ருலம், தம்பி, குற்ருலம்! இங்கு அருவி அழகு! ஆனல் திருவிடத்தின் பொலிவு இஃதொன்றேதானு? அதோ காவேரி! இதோ தாமிரபரணி! வைகைக்குத்தான் என்ன! இந்த ஆற்ருேரங்களிலே வளர்ந்த பண்பாடு எத்தகையது! இதோ உழவர், இதோ கற்றுணர்ந்த பெரியோர்கள் சிற்றறிவினரின் செயல் கண்டு வருந்தித் தலைகுனிந்துவிடுதல் போல, செந்நெல் கற்றைகள், பழமுதிர் சோலைகள், வாளை துள்ளும் வாவிகள், எல்லாம், எனினும் ஆயிரம் மைல் 'யாத்திரை' நடத்தியும், அரும்பெருந் தலைவரே, ஆசியாவின் ஜோதியே, எனறு அர்ச்சித்தும், நமது ஆட்சியாளர்கள் பெறுகிற தொகையோ இருநூறு—ஆருயிரத்தில் இருநூறு, குற்ருலம் இருந்தென்ன, கொடைக்கானல் எழில் காட்டி என்ன, ஒத்தைக் கல் மன்று, 'ஊட்டி'யாகி உல்லாசமளித்தென்ன, எல்லாமிருந்தென்ன, எமக்கென்று ஓர் அரசு இல்லையே, என்றெண்ணி ஏங்கத்தான் செய்கிறது.

அவர் கூறுகிருர், தான் கண்ட அற்புதமான காட்சியை.

இருண்ட மேகம் சுற்றிச் சுருண்டு சுழி பெறியுங் கொண்டையாள்.

கார்நிறக் கூந்தல் என்று வண்ணத்தை மட்டுமல்ல, அது... சுருண்டு சுழித்து அழகுற இருக்கிறதாம்.

விழி, இலேசானதா? நெஞ்சைச் சூறையாடுகிறதாமடா, தம்பி.

குழை யேறியாடி நெஞ்சைச் சூறையாடும் **விழிக்கொண்டையாள்.**

கேட்டாயா? கெண்டை மீன் போன்ற கண்கள் என்று மட்டும் சொல்லவில்லை, அந்தக் கெண்டைகள் நெஞ்சைச் சூறையாடுகின்றனவாம்.

அரும்பு இதழினுள், கரும்பு மொழியினுள், முல்லைப்பல்லினுள், பிறை நுதலினுள்)

அழகு சரி, பருவம்? என்று என்று கேட்பரே, இதோ அதையும் கூறுகிருர்.

மங்கைப் பருவத்தாள், மங்கைப் பருவத்தாள் என்ருல் என்ன செய்கிறது தெரியுமோ அந்தப் பருவம், **அறிவை மயக்குமொரு கருவம் இருக்கும் மங்கைப் பருவத்தாள்......** அறிவை மயக்குகிறதாம்.

மதிமுகம் அவளுக்கு, முத்துப் பற்கள், அந்த முத்துவரிசையை எட்டிப்பார்ப்பதுபோலிருக்கிறதாம் அவள் மூக்கிலொரு முத்து— **பல்லினழகை எட்டிப்பார்க்கு மூக்கிலொரு முத்தினுள்.**

உற்சாகத்தின் உச்சி சென்று அவர் கூறுகிருர், **கச்சுக் கிடக்கினும் தித்திச்சுக் கிடக்கும் இரு...**

குற்ருலக் குறவஞ்சி ஆசிரியர் இப்படி ஒரு வசந்தவல்லியைக் காட்டுகிருர்.

எங்கே அந்த எழில் மங்கை? முத்துப்பல்லினுள் எங்கே? துடியிடை எவ்விடம் உளாள்? கனகவல்லி எங்கே? மதிமுகவதி எவ்விடம் இருக்கக் காண்கிறீர்? பூ இதழா, பொன்மேனியா, அறிவை மயக்கும் பருவத்தாள் என்கிறீரே, அவளைக் காணுமுன்பே அறிவு மயக்கமேலிடுகிறதே, எங்கே உள்ளனள் அந்த ஆரணங்கு?

அவள் என் நெஞ்சைச் சூறையாடுவது இருக்கட்டும், புலவரீர், உமது கவிதை என் நெஞ்சைச சிதறடிக்கிறதே, எங்கே அந்தச் சிற்றிடை, கூறுக, என்று கேட்டிடத் தோன்றும், குற்ருலக் குறவஞ்சி படிக்கும்போது. நான் அந்த மாளிகைக் கூடத்திலே அமர்ந்து குறவஞ்சியைப் படித்தபோது, தம்பி, கவி தீட்டிக் காட்டிய அந்த பெண் பாவையை அல்ல, நமது திரு இடத்தைத்தான் எண்ணிக் கொண்டேன். அத்துணை எழில் நிரம்பிய நாடு. ஆயின், என்ன நிலை இன்று என்று எண்ணும்போது, இன்று திருவிடம் இருக்கும் நிலையினைப் படம்பிடித்தளிக்க ஓர் புலவர் முன்வரக் கூடாதா என்று கூட எண்ணினேன்.

குற்ருலக் குறவஞ்சி ஆசிரியர் தீட்டியது, வசந்தவல்லி எனும் கற்பனைக் காரிகைபற்றி! அந்தக் காரிகை, குற்ருலநாதருக்குக் காணிக்கையாகிவிடுவது, நூலின் பொருள்.

வசந்தவல்லி போன்றே கண்டோரை கவர்ச்சிகொள்ளச் செய்யும் எழில் ததும்பும் நம்நாடு, இன்று வடவருக்கல்லவா கால் வருடக் காண்கிருேம்.

வசந்தவல்லி வருகிருள், பந்தாடி மகிழ்கிருள், குற்ருலநாதரின்

(10-ம் பக்கம் பார்க்க)

4-5-7-10!

சீறி எழுவர், சாபம்கொடுப்பேன் என்று மிரட்டுவர், சர்க்காரை அழைப்பர், தடை உத்தரவு போடு என்பர், இல்லையேல், நாட்டிலே எதிர்ப்புத் தீ மூட்டிவிடுவோம், சர்க்காரையே கவிழ்த்துவிடுவோம் என்று கொதித்துக் கூறுவர், பார்ப்பனத் தலைவர்கள்—அவர்தம் வாழ்க்கை முறை, பண்பாடு முற்றிலும் திராவிடருடையதினின்றும் வேறுபட்டதாக இருந்தது, திராவிடர் கண்டு வெறுக்கத் தக்கதாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டினால்.

ஆரியராவது — திராவிடராவது ஏன் இந்த அபத்தப் பேச்சு என்று சிலரும்,

ஆரியர்—திராவிடர் என்று பேதம் காட்டிப் பேசுவது பெரும் ஆபத்து என்று வேறு சிலரும்,

ஆரியர்—திராவிடர் என்று முன்பு எப்போதோ ஒரு இன வேற்றுமை இருந்திருக்கலாம், இப்போது எல்லாம் கலந்து, குழைந்து ஒன்றுபோலாகிவிட்டது என்று மற்றும் சிலரும்,

ஆரியர் என்றால், ஒரு தனி இனம் என்று பொருள் கொள்வதா? என்ன மந்தமதி! ஆரியர் என்றால் மேலோர் என்றல்லவா பொருள் என்று இன்னும், சிலரும், பேசுவர், அனைவரும், ஆரியர் — திராவிடர் என்ற பிரச்சினை நாட்டிலே பெரும் அளவுக்கு மக்களிடம் பரவி, விளக்கமாகிக்கொண்டு வருவது கண்டு, பீதி அடைந்திருக்கிறார்கள்.

ஒரு தலைமுறைக்கு முன்பு எல்லாப் பார்ப்பனரும் தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை கொண்டனர். ஜெர்மன் நாட்டு **மாக்ஸ்முல்லர்** என்பார் தீட்டிய ஏடுகளைக் காவியமாகக்கொண்டு, ஆரிய இன உயர்வுபற்றிப் பூரிப்புடன் பேசினர். ஆரிய சேவா சங்கம், ஆரிய கலாபிவிருத்திச் சங்கம், ஆரியமத உபாக்யானம், என்றெல்லாம் கூறிக்கொள்வதிலே குதூகலம் கொண்டனர்.

இப்போது? எல்லாப் பார்ப்பனரும், ஆரியர் என்று தங்களைக் கூறிக்கொள்ளத் தயக்கம், மயக்கம், அச்சம், கொள்கின்றனர். அந்த முறையில் ஆரியம்—ஆரிய இனத்தின் யோக்யதை — அவர்களிடம் இருந்த பண்பாடு, வெட்ட வெளிச்சமாக்கப் பட்டுவிட்டது.

“ஆரியரை அறியீரோ! பச்சை தேடி நுழைந்தோர்—நச்சு நினைப்பினர்!—கொச்சை மொழியில் ஏதேதோ குளறிப் பாமரரை ஏய்த்தோர்! பானம் பலபருகி பர்ணசாலைகளில், பசுங்கன்றையும், மானையும் சுட்டுப் பொசுக்கித் தின்று காலங்கழித்துவந்தவர்கள்! அவர்களிலே அரசரானோரும்கூட, அருவருக்கத்தக்க முறையிலேயே வாழ்க்கை நடத்தினர்! அவர்கள் நடத்தியதாகக் கூறப்படும் யாகயோகங்களும், காட்டுமிராண்டிச் செயலாகவே காணப்படுகின்றன என்றெல்லாம் இன்று ஆராய்ச்சியாளர்கள் தக்க ஆதாரத்துடன் எடுத்துரைக்க முடிகிறது! கோபம் கொப்பளிக்கிறது ஆரியர் வழிவந்தோருக்கு—எனவே அவர்கள் என்ன கூறுவது என்று தெரியாமல், ஆளுக்கோர் விதமாகவும், வேளைக்கோர் வகையாகவும் பேசுகின்றனர்.

ஆரியப் பார்ப்பனர், அந்த நாட்களில் மிகமிகக் கேவலமான முறையிலே வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருந்தனர் என்பது குறித்து இன்று திராவிடர் எடுத்துரைக்கவோ, ஏளனம் பேசவோ, என்ன அவசியம்? என்று கேட்கும் ‘மேதைகள்’ உளர்; அறிவோம்.

புதை குழியைக் கிளறி மகிழும் போக்குமல்ல, பிணத்தை அறுத்தெடுத்துப் பரிசோதனை நடாத்துவதுமல்ல, நமக்குள்ளவேலை. ஆரியத்தை—ஆரியர் தம் வாழ்க்கை முறையை இன்று திராவிடரிடம் எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், அந்த வாழ்க்கை முறை வெறுக்கத்தக்கதாக இருந்தது என்பதை உணர்த்துவதற்காக மட்டுமல்ல, அத்தகைய வெறுக்கத்தக்க முறையிலே நெளிந்து கொண்டிருந்த ஆரியர், இன்று குருமார்களாகிவிட்ட கொடுமையையும், ஆபாசத்தை அவர்கள் தேவரசம் என்று கூறும் விந்தையையும், மட்டரகமான வாழ்க்கை முறையை மகான்களின் போக்கு என்று கூறி, மக்களை மதியற்றோர் ஆக்கிடும் அக்கிரமத்தினையும் கண்டித்துக் களைந்தெறியவேயன்றி, கைகொட்டிச் சிரித்திட அல்ல!

ஆரியரின் வாழ்க்கைமுறை அவலட்சணமும், அக்ரமமும் நிரம்பியதாக இருந்தது என்பதை அவர்கள் தீட்டிய புண்ய கதைகளே விளக்கமாக்குகின்றன!

தாயைப் புணர்ந்தோன், தங்கையை மணந்தோன், குருபத்தினியைக் கூடினோன், ரிஷி பத்தினியை இரசித்தவன், உருமாறிச் சென்றவன், நடுநிசியில் நுழைந்தவன், நாகமானவன் — என்று இவ்வண்ணம் இருக்கிறது, ஆரிய புருஷோத்தமர்களின் காமச் சேட்டைகள்—இவைகள் நமது பூஜாமாடங்களிலே வைத்துப் போற்றப்பட்டும் வருகின்றன.

எத்தகைய மதிமயக்கம் ஊட்டப்பட்டிருந்தால், பாஞ்சாலி பத்தினியாக்கப்பட்டிருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

ஐவருக்கு ஒருத்தி! மிருகம் தன் ‘ஜதை’யிடம் மோப்பம் பிடித்துக் கொண்டுவரும்பிற மிருகத்தின்மீது சீறிப் பாய்கிறது, ‘அவதார புருஷரோடு’ தோழமை பூண்டோழுகி வந்த ஐவர், அம்மையைப் பொதுப் பொருளாக்கிக்கொண்டனர்! காடும் ஏற்காத இந்தக் கண்றாவிக்கு கடவுட் காதை என்று பெயரிட்டு, கைகூப்பித் தொழும் அளவுக்குக் கருத்து கெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்பாரில் வேறெங்கும் காண முடியாத இந்தக் கேவலம், இங்கு

'கோயிலுக்கு' உரியதாக்கப்பட்டிருக்கிறது.

எந்தத் திராவிடப் பேரறிஞர் இதைக் கண்டிக்கிருர்?

ஒழுக்கம்பற்றிப் பேசிடும் உத்தமர்கள் இருக்கிருர்கள்; கற்புக் குறித்து கல்லும் கரையும் வண்ணம் பேசுவோர் உளர்! எவர், இந்தக் கேவலத்தைக் கண்டித்தனர்!!

தமிழருக்கு இத்தகைய 'தயாபரி' வேண்டாமப்பா, என்று கூறினவர் யார்?

மத சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்திஞலே, ஒழுக்கம் பாழ்பட்டு விடும் என்று கூறி, அறிவு விளக்கமளிக்கும் நமது இயக்கத்தின்மீது காய்கின்றனர், பாய்கின்றனர்!! ஒழுக்கம் ஓராயிரகாததூரம் ஓடிடும் வகையில், ஐவருக்கு ஒருவர்! இதனைக் கண்டிப்பார் காணேம்! சூடம் கொளுத்தி வேண்டிக்கொள்கிருர்கள், ஐவருக்கும் பத்தினியாக இருந்த அம்மையை!!

ஆரியம், எந்த அளவுக்கு அறிவுக் கண்ணை அவித்துவிட வல்லது என்பதற்கு இது போதாதோ!

சங்க நூற்களிலே காணக் கிடக்கும் சுவையினை அழகுபட எடுத்துக் கூறும் விரிவுரையாளர்களும் தமிழ்ப் பண்பாடுபற்றிப் பேசிடும் ஆய்வாளர்களும், ஏன், வாய்மூடிக் கிடக்கின்றனர்?

தனியே கண்டு கேளுங்கள் "ஐயன்மீர்! ஐவருக்கும் பத்தினி என்பது ஏற்புடையதா? செந்தமிழ் நாட்டுக்குரிய பண்பாமோ?" என்று. "என்ன அப்பனே! இங்ஙனம் கடாவுகிருய்! கணிகையர் குலத்து வந்த கட்டழகியே, கோவலன் தன்னைவிட்டுப் பிரிந்ததும், கோலமயிற்சாயலினைத்தானே கெடுத்துக் கொண்டதுடன், அவ்ன் இறந்துபட்டான் என்று தெரிந்ததும், பிக்ஷுக்கோலம் பூண்டனளே! தமிழகம் கற்புக்குப் பெட்டகமன்ருே! பண்புக்கு உறைவிடமல்லவோ! ஒருத்தன் ஒருத்தி! இஃதன்றோ, தமிழர் மாண்பு!" என்று கூறிடுவார்.

புலமை இருக்கிறது அவர்தம் உரையில்.

"அங்ஙனமாயின் அறிஞரேறே! ஐவருக்குப் பத்தினி என்றுள்ள ஆபாசத்தைத் தமிழகம், இன்று புண்ய காதையாகக் கொண்டாடு தகுமோ? பாஞ்சாலியைப் பத்தினித் தெய்வமென்று கொண்டாடுதல் மடைமையன்ருே?" என்று கேட்டால், "ஐயமென்ன! நிச்சயமாகத் தமிழர் நெறியே இத்தகைய் இழி செயலை வெறுத்தொதுக்கும்" என்பர். "நமது மக்கள் பாஞ்சாலியைக் கும்பிடுகிருர்களே?" என்று கேட்டால், "அறிவீனம்!" என்பர்; "அந்த அறிவீனத்தைப் போக்கிட அனைத்தும் அறிந்த சான்ருேராம் தாங்கள் முனைந்து பணியாற்ற வேண்டாமோ?" என்று கேட்டாலோ, "அஃது எங்ஙனம் இயலும். அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நம் மக்கள், சீறுவர், பகை கொள்வர்!" என்று கூறிச் செல்வர்.

செந்தமிழ்ச் செல்வர்களின் போக்கு இங்ஙனம் இருந்துவிடுகிறது!

இந்தச் செல்வர்களிலே சிலர், இத்தகைய ஆபாசத்தை எதிர்த்துப் போரிட ஆற்றலற்றவர்களாகி விட்டதை மறைத்திட வேண்டி, தமது அறிவுத் திறமையைக் கொண்டு, ஏதேனும் ஓர் தத்துவம் தயாரித்துத் தருகிருர்கள்.

எதற்கும் ஓர் உட்பொருள், நுண்பொருள் — காட்டுகிருர்கள். எப்போது? ஆபாசம் கண்டிக்கப் படுகிறபோது!!

ஏன், ஐவருக்கு பத்தினியானுள், திரோபதை? கதை உண்டு! கனி கொண்டுவந்தேன் என்று விஜயன் கூற, அவனம்மையின் செவியில் கனி என்றுபட, ஐவரும் பங்கிட்டுக்கொள்க என்றுரைத்தார்களாம்! தாய்சொல் தட்டலாமோ! ஐவருக்கும் விருந்தளிக்கும் பேறு தரப்பட்டது அம்மைக்கு! அவர்களும், ஒருவர் மனமும் கோணுமல் நடந்துகொண்டனர் — ஆற்றல் மிக்கவர்கள்!!

இதோ கேளுங்கள் மற்ருேர் விளக்கக் காதை.

குந்தியின் குளறுபடியால், பாஞ்சாலிக்கு இந்தக்கதி வந்தது, என்று கதை இருக்கிறது—சாமான்யர் விஷயமாகிவிடுகிறது என்றெண்ணிப் போலும், சர்வேஸ்வரனின் சண்டித்தனத்தால் இந்த 'சண்டாளத்தனம்' நேரிட்டதாக ஒரு கதை கட்டப்பட்டிருக்கிறது.

இந்திரசேனை எனும் பெண்மணி, பரமசிவனை நோக்கித் தவம் புரிகிருள்.

சாலோக சாமீப சாரூப சாயுச்யப் பதவியை சர்வேஸ்வரனே! எனக்கு அருளுவாயாக!—என்றல்ல, எனக்கேற்ற கணவனைத் தருக! என்று.

இந்த வேண்டுகோளை, இந்திரசேனை, ஐந்து முறை சொன்னுள்—சிவனுர் தோன்றி அளித்தோம் ஐவரை! என்ருராம்! ஐவரா? என்று அச்சத்துடன் ஆரணங்கு கேட்க, சடலையாடி ஆமாம்! ஐந்து முறை கேட்டதால் ஐவர் தருகிறேம் என்ருராம். எப்படி, சிவனுரின் சித்தம், பார்த்தீர்களா? கடவுளய்யா கடவுள்! கணக்கிலே புலி!

அந்த இந்திரசேனைதான் திரௌபதை!

அரன் அருளிய ஐவர்தான், பஞ்சபாண்டவர்கள்!!

பார்த்தீர்களா, இந்த பச்சைப் புளுகர், பரமசிவனையே சாட்சியாக்கிவிட்டார்!!

அந்த அம்மைமீது தவறில்லை—ஐவர்மீது குற்றம் இல்லை, அரன் வேலை இது, என்று கூறுகிருர் இந்தக் கதாசிரியர்.

இவை ஆரிய ஆபாசம் என்று கூறி, தமிழகத்திலிருந்து இவைகளைக் களைந்தெறிவோம் என்று அறப்போர் தொடுத்திட ஆற்றலற்றவர்கள், ஆபாசங்களை விளக்கக்கதைகள் கட்டுகிருர்கள்அந்தக் கதைகளோ, முந்தைய ஆபாசத்தைவிட அருவருக்கத் தக்கனவாக உள்ளன. பாம்புக்கடிக்குப் புலியின் பல்லில் மருந்து தேடுகிருர்கள்! சேறுபோக மலக் குழியில் வீழ்கிருர்கள்!!

சிவனுர்மீது 'பாரத்தைப்' போட்டுவிட்டால், ஐவருக்கு ஒருவரா என்று கேட்கும் துணிவு யாருக்கு இருக்க முடியும்! கேட்டாலோ, சிவனுரையா சந்தேகிக்கிருய் என்று கேட்டு வாயை அடக்கிவிடலாம் என்று எண்ணுகிருர்கள்.

ஆரியரின் வாழ்க்கை முறையில் ஐவருக்கு ஒருவர் போன்ற ஆபாசங்கள் நிறைந்திருந்தன.

மாதவி எனும் மங்கை, யயாதி மன்னன் குடும்பத்துக் குலக்கொடி! இந்த அம்மைக்கு நான்கு கணவர்கள்! அரச குமாரர்கள்!!

தமிழகத்து மாதவி, கணிகையர் குலம்—கற்புக்கு ஓர் எடுத்துக் காட்டானுர்! ஆரிய மாதவிக்கோ நான்கு புருஷர்கள்!

சக்தியற்றதுகள், யுக்தியற்றதுகள், சத்தற்றதுகள், ஒரு கணவன் போதும் என்று இருந்துவிடுகிருர்கள் என்று எண்ணி ஆரிய மாதவி நான்கு கணவன்மார்களைப் பெற்று தன் திறமையையும் தரத்தையும் தரணிக்கு எடுத்துக் காட்டினுர்கள் போலும்.

ஆரிய மாதவியைத் தோற்கடிக்கத் தோன்றியதுபோல, பாஞ்சாலி ஐவரை மணந்தாள்.

ஜடிலகவுதமி என்ற பார்ப்பன மங்கை, இவர்களைவிட வள்ளற்றன்மை மிக்கவர்—கணவர் ஏழு!!

மரிசா என்பவளோ, பத்துப்பேரை மணந்துகொண்டாள்.

4—5—7—10!

புண்யம் தேடிடும் பக்தர்கள் இந்தப் புள்ளி விவரத்தைக் காணட்டும்!

விதவைக்கு மறுமணம்—விவாக விடுதலை—என்று பேசுங்கள், இந்தப் புண்யவான்களுக்கு முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது! திருமணம் என்ன வியாபாரமா, காண்ட்ராக்டா, கடவுள் பார்த்து நடத்திவைக்கும் புனிதமான காரியமல்லவா—விதவைக்கு மறுமணம், விவாகவிடுதலை என்று பேசி, தர்மத்தை, சத்யத்தை, சன்மார்க்கத்தை நாசமாக்காதீர்—என்று கோபித்துக்கூறுகின்றனர்.

4—5—7—10! இது சரியா? என்று கேளுங்கள் — மகாபாபி! மகாபாபி!—என்று ஏசுவரேயன்றி, பதில்கூறத் துணிவு இருக்காது!!

இந்த 'ஆரியம்' கற்புக்கும் ஒழுக்கத்துக்கும் இடமளிக்காது, இழிசெயலை, கேவலத்தை, அன்னை வாக்கால், ஆண்டவன் வாக்கால் நேரிட்டுவிட்டது என்று கதை அளக்கும் 'ஆரியம்' ஒழிக்கப்பட்டாகவேண்டும் என்று கூறுவதிலே என்ன தவறு காண்கிருர்கள்!

ஓவியம் காண வருகிருயா? என்று கேட்ட கணவனிடம், ஆண் ஓவியமேல் நான் பாரேன், பெண் ஓவியமாயின் நீர் பார்த்திடச் சம்மதியேன் என்று கூறின, தமிழ் அணங்கு எங்கே, நாலு, ஐந்து, ஏழு, பத்து என்று பட்டாளம் தேடிய ஆரியப்பாவையர் எங்கே!

கண்ணகிபிறந்த தமிழகம் இத்தகைய காதகிகளைப் போற்றும், கேவல நிலைக்கா செல்லவேண்டும்.

கண்ணகிக்குக்கோயில் காணும் —ஐவருக்கும் ஆனந்தமளித்த ஆற்றலணங்குக்கு ஆலயம்!!

விளக்கம்கூற, புது தத்துவம் காண, முனையும் பெரியீர்! நந்தமிழ் நாட்டின் பண்பாடு பாழ்படுவது கண்டும், 4, 5, 7, 10 என்ற ஆரிய ஆபாசத்தைக் கண்டித்திட முன் வராதிருத்தல் அழகாமோ?

ஆரியர் — திராவிடர் என்று பேதம் பேசுவதா! என்றும், ஆரியர்—திராவிடர் — மங்கோலியர் — துரானியர் — எல்லாம் மனிதகுல மன்றோ, வோல்காவிலிருந்து கங்கைவரை மனிதகுலமன்றோ என்று கம்யூனிசம் பேசிடும் கண்ணியர்களுக்கு, 4, 5, 7, 10 என்ற கணக்கேனும், சிறிது கருத்துத் தெளிவு அளிக்கட்டும்.

"இந்தோ-ஆரிய மக்களிடம் ஒரு காலத்தில் ஒருத்தி ஒரே சமயத்தில் பலரை மணந்து வாழ்தல் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்பதற்கு மகாபாரதத்தில் வருகின்ற சில செய்திகளே சான்ருகும். பாஞ்சாலி பாண்டவரை மணப்பதற்கு முன்னரே ஜடில கவுதமி என்ற பார்ப்பன மங்கை இருடிகள் எழுவரை மணந்து வாழ்ந்தாள்; மரிசா என்பவள் பிரசேதர் பதின்மரை மணந்து வாழ்ந்தாள்; யயாதியின் குடும்பத்தில் பிறந்த மாதவி என்பவள் அரசர் நால்வரை மணந்து வாழ்ந்தாள். மகாபாரதக் குறிப்புப்படி இப்பழக்கம் ஒரு காலத்தில் பெரு வழக்காக இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது."

டாக்டர் மா. இராசமாணிக்கனுர், எழுதுகிருர் இதுபோல.

"தமிழாசிரியர் தானே! நாஸ்திகராகத்தான் இருப்பார்" என்று நாப்பறையினர் கூறிடுவாரோ, என்று கருதி, இந்தக் கருத்து அடியேன் பெற்றதேயன்றி, புனைந்துரைத்தல்ல என்று காட்ட வேண்டி, பேராசிரியர் என். கே. டட். என்பார் எழுதியுள்ள இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலில், 73, 74, 113-ம் பக்கங்களைக் காண்க, என்று பாதுகாப்புணர்ச்சியுடன் கூறியுமிருக்கிருர்!!

4—5—7—10!

புள்ளிவிவரம் ஆதாரத்தோடு இருக்கிறது—ஐயமில்லை! ஆனுல் இந்த ஆபாசத்தைப் புண்யகாதையாக்கிக்கொண்டிருக்கும் இழி நிலை ஒழியவேண்டுமே, அதற்கென்ன செய்தீர்? என்ன செய்யப்போகிறீர் என்றுதான் கேட்கிருேம். ★

7-பக்கத் தொடர்ச்சி

கோலம்கண்டு காதல் கொள்ளுகிருள், குறத்தி வருகிருள், குறி சொல்கிருள், நாதனைத் தேடிப் பெற்றுக் கூடி மகிழ்கிருள், என்று நூல் எடுத்தியம்புகிறது.

அங்ஙனம் இருத்தலுக்குப் பதிலாக, இத்துணை அழகு ததும்பும் வசந்தவல்லி வந்தாள், பந்தாடி நின்ருள், அவளை ஓர் மலைப்பாம்பு விழுங்கிற்று, இடைவரை உள்ளே, மற்றப்பகுதி மேலே, அவள் அலறுகிருள், துடிக்கிருள், அதுகேட்டு ஓடிவந்தவர்கள் மலைப்பாம்பின் அழகு கண்டு மயங்கி நின்றனர், மங்கை நல்லாளின், கண்களிலே நீர் ததும்பிற்று, அவர்களோ, மலைப்பாம்பு, மெள்ள மெள்ள அவளை உள்ளுக்குக் கொண்டுசெல்லும் திறத்தினைக் கண்டு வியந்தனர், என்று நூல் இருந்திருக்குமேல், எவ்வளவு வேதனை கொள்வோம். தம்பி, தாயகத்தின் இன்றைய நிலை அங்ஙனமன்ரே இருக்கிறது. என் செய்வோம், திரு இடத்தின் எழிலை எங்கு நோக்கினும் காண்கிருேம், காணுந்தோறும் காணுந்தோறும், இத்துணை எழில் மிக்க நாடு, அடிமைப்பட்டுக் கிடக்கிறதே என்ற எண்ணமன்ரே மேலிடுகிறது. அடிமையின் கரத்திலே ஆணிப் பொன்னுபரணம் இருத்தல் போல, வடவருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் திராவிடத்திலே எழில் இருக்கிறது. அந்த எழிலோவியங்களில் ஒன்றுதான் குற்ருலம்.

அன்பன்,

அண்ணுத்துரை.

திராவிடர்

எழுச்சிப் பாடல்கள்

ஆசிரியர்: ஏ. கே. குமாரவேலன்,

பாடியவர்கள்: ஆம்பூர், பெ. சண்முகம், சேவூர், அ. தேவராசன்.

கமிஷன் 25%

தனி பிரதிக்கு 5 அணு தபால் தலைகள் அனுப்பவும்.

—:விபரங்கட்கு:—

தேன்மொழி வெளியீடு

சேவூர் (அஞ்சல்) ஆரணி, (வ.ஆ.)

மக்கள் கரமும் மன்னன் சிரமும்

கிராம்வெல்.

சார்லஸ்.

சி.என்.அண்ணுத்துரை.

அரண்மனையில் மன்னன் இருக்கிருன்' மாமன்றம் அரசோச்சுகிறது. கணக்குத் தீர்க்கும் காரியம், தீவிரமாக நடைபெறுகிறது. மாமன்றத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும், மக்கள் உள்ளத்திற்கு தென்றலென இனிக்கிறது, மன்னனுக்கோ வாடை என வாட்டுகிறது. இந்த நெடுநல் வாடை கண்டு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஆச்சரியமடைகின்றன.

நெருக்கடியின்போது மாமன்றத்தைக் கூட்டுவதும், பிறகு கலைந்துபோகச் சொல்வதும், எஃதச்சாதிகாரத்தை வளர்க்கும் செயலாகும். இதனுலேயே, சார்லஸ், பதினேராண்டுகள் மாமன்றம் கூட்டாமலேயே ஆதிக்கம் புரிந்தான். இந்தக் கேடுகளைய முனைந்தது மாமன்றம், மூன்ருண்டுக் காலத்துக்குமேல், மாமன்றம் கூட்டாமலிருப்பது சட்ட விரோதமாகும் என்றும், கூடிய மாமன்றத்தை அதன் சம்மதம் பெருமல் ஐம்பது நாட்களுக்குள் கலைப்பது கூடாதென்றும் சட்டம் இயற்றினர். இனி மன்னன், மாமன்றம் என்ன செய்யும் என்று ஆணவம் பேச முடியாது! தன் செயல்களுக்கு கணக்குக் காட்டவேண்டிய காலம், மூன்ருண்டுகளில் வந்துதீரும். மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் இந்தப் புதிய ஏற்பாடு பெரிதும் முக்கியத்வம் வாய்ந்ததாகும்.

மார்க்கத்துறையினர் அரசியலில் அதிகாரம்செலுத்துவதை அறவே ஒழித்தாக வேண்டும் என்ற எண்ணம், மாமன்றத்தில் வலுத்தது. 'வேரறக்களைவது' என்ற திட்டம் வலியுறுத்தப்பட்டது.

மன்னன் தன் கண்முன் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கும் சக்தியற்று இருந்தான். இவைகளுக்குச் சம்மதம் தந்தால்தான், மாமன்றம், பணம் தருகிறது—பணமோ தேவை; செய்துகொண்ட ஏற்பாட்டின்படி இரு படைகளுக்கும் செலுத்துவதற்கு.

மன்னன் உள்ளம் இவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை; கரத்திலே வலு இல்லை, எனவே சமயத்தை எதிர்நோக்கியபடி இருந்தான்.

முயற்சிகள் ஒருபுறம் நடைபெற்றவண்ணம் இருந்தன. மன்னனிடம் கெஞ்சிப் பேசிப் பிழைத்துவந்த கும்பல், இந்த ஆபத்தை நீக்கினுல், இலாபம் பிறகு கிடைக்கும் என்று அறிவர். எனவே அவர்கள், மன்னனை, மாமன்றத்தார் தலையாட்டியாக்க விரும்பும் கொடுமைபற்றி உருக்கமாகக் கூறி ஆதரவு திரட்டிப் பார்த்தனர். படைவரிசையிலேயும் இந்தப் பிரசாரம் நடைபெற்றது.

ஆனுல் அரண்மனை, மாளிகை, பாசறை எங்கு இவ்விதமான சதி உருவானுலும், உடனுக்குடன், மாமன்றத்துக்கு விஷயம் எட்டிவிடும்—மாமன்றத்தின் சார்பினர், எங்கும் இருந்துவந்தனர். ஒரு சதியும் கருவிலிருந்து வெளிவர இயலவில்லை, சிதைக்கப்பட்டது.

போப்பாண்டவரிடம் உதவி கோரி எனிரிடாராணி புதிய முயற்சி செய்துவந்தார். பிரிட்டனில் கத்தோலிக்கருக்குச் சலுகைகள் அளிக்கப்படும் என்று வாக்களித்து இந்த உதவி கோரப்பட்டது.

மக்கள் வீரமாகத் திரண்டு நின்றனர், மாமன்றம் விழிப்புணர்ச்சியுடன் இருந்துவந்தது என்ருலும், சிறிது அயர்ந்தால், மன்னன் சதிபுரிவான் என்ற அச்சம்விட்டபாடில்லை. ஆதிக்க காலம் போய்விட்டது, மக்கள் விழித்துக்கொண்டனர், இனி அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அலங்காரச் சின்னமாக இருந்துவிடுவோம் என்று தீர்மானிக்கக் கூடியவனல்ல, சார்லஸ்; தத்துவவாதி!

படைகளை மாமன்றத்தின் விருப்பமின்றி அமைத்தல் கூடாது, போர் தொடுத்தல் மன்னனுடைய தனித் தீர்மானமாக இருத்தலாகாது, வரிகளை, மாமன்ற ஒப்பமின்றி விதித்தலாகாது — என்று இந்த "கூடாது—ஆகாது" என்ற அந்தாதி குறையவில்லை.

மன்னன் இந்நிலையில், ஸ்காத்லாந்துசெல்ல வேண்டியதாயிற்று-சமரசத் திட்டம் வகுக்க. மன்னன் ஸ்காட் மக்களுக்குச் சலுகைகள் தருவதென்றும், அதற்கு ஈடாக அவர்கள் அரசனுக்குத் துணை நின்று பிரிட்டிஷ் மாமன்றத்தை ஒடுக்குவதென்றும் ஒப்பந்தமாகிவிட்டது, அதன் பொருட்டே அரசன் அங்கு செல்கிருன் என்று பேச்சுக் கிளம்பிற்று. முன்னேற்பாடு குறையின்றி இருக்கவேண்டும் என்பதற்காக; ஒரு குழுவினரை, மன்னனுடன்செல்ல மாமன்றம் அமைத்தது. மாமன்றத்தின் அரிமாநோக்கு அரசன்மீது எப்போதும் இருத்தல்வேண்டும்; சிறைக் காவலர்கள் கைதியைக் காண்காணிப்பதுபோல, மன்னன் ஆகிவிட்டான்; மறுப்பதற்கில்லை. இந்தக் குழுவில், ஹாம்டன் இருந்தார்!

மாமன்றம், பல்லாண்டுகளாகக் குவிந்துகிடந்த குப்பையைக் கூட்டித் தள்ளிற்று — பட்ட கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள ஓய்வு தேவைப்படவே பிறகு கூடுவதெனக் கலைந்தது.

மாமன்ற உறுப்பினர்கள் தத்தமது வட்டம் சென்றனர், அங்கெல்லாம் அவர்கள் மக்களிடம், பூத்து வரும் புது மலரின் அழகு குறித்தும், மணம் பற்றியும் எடுத்துரைத்தனர். வெற்றி வீரர்களாக வீடு திரும்பினேரை மக்கள் வாழ்த்தி வரவேற்றனர். "பெற்ரேம் வெற்றி, பெருமைக்குரியதே! எனினும் பெற்ற வெற்றியை அழித்திட மன்னன் புது முயற்சிகள் செய்யக்கூடும் எனவே நாம்

எதற்கும் தயாராக இருக்க வேண்டும்'' என்று உறுப்பின அறிவுரை கூறினர்

மாமன்றம் கூடாதிருக்கும் நாட்களில் இன்றியமையாத ஏற்பாடுகளைக் கவனிக்கவும், நிலைமைகளுக்கேற்ப கட்டளை பிறப்பிக்கவும், ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், பிரபுக்கள் சபையினரும் உண்டு. மாமன்றம், பிரபுக்களை வீணாக எதிரி முகாமுக்குத் துரத்த விரும்பவில்லை. மக்களாட்சியை மதிக்கும் பிரபுவை, தங்கள் முகாமுக்கு அழைத்துக்கொள்வதே அறிவுடைமை என்று எண்ணினர். அல்லலும் ஆபத்தும் விளையும் வகையில் ஆட்சிமுறை செல்வதைத் தடுத்தாக வேண்டும் என்ற பெருநோக்கம்கொண்ட பிரபுக்கள் சிலர், மாமன்றத்துடன் தோழமை பூண்டனர்.

மன்னன் ஸ்காத்லாந்திலிருந்துகொண்டு, தன் துணைக்குப் பலம்தேடிப் பார்த்தான், சில பிரபுக்கள் முன் வந்தனர், எனினும், தாக்குதலுக்குத் தேவையான அளவிலும் வகையிலும் துணைதிரளவில்லை. மன்னன் மீண்டும் இலண்டன் மாநகர் வந்தான்—வரவேண்டிய நிலைமை, புதியதோர் ஆபத்தால் ஏற்பட்டது.

அயர்லாந்திலே புரட்சி மூண்டுவிட்டது! அயர் மக்கள் நீண்டகாலமாகக் கொடுங்கோலால் தாக்குண்டு தவித்தவர்கள். மேலும், அங்கு சென்று குடி ஏறிய பிரிட்டிஷ் மக்கள், அயர் மக்களை அடிமைகளாக்கினர், அக்ரமம் புரிந்தனர். ஸ்டாபோர்டு காலத்தில் சகிக்கொணாக் கொடுமைகளைக் கண்டனர் அயர் மக்கள். பிரிட்டனிலும் ஸ்காத்லந்திலும் கொந்தளிப்பு இருக்கக்கண்டு, தளைகளை அறுத்துக்கொள்ள, புரட்சி செய்தனர். இதனை அடக்கப் படை வேண்டும், படை பயன்பட, பணம் வேண்டும். மன்னனுக்கு வாய்ப்பாகவும் இது அமைதல் கூடும். அயர் புரட்சியை அடக்க, மாமன்றம் முன் வந்து பணம் தந்தால், அதைக்கொண்டு அமைக்கப்படும் படையைக்கொண்டு, மன்னன் மாமன்றத்தை தாக்கித் தகர்க்கக்கூடுமல்லவா! நல்ல வாய்ப்பு, இந்த நெருக்கடி என்று தோன்றிற்று.

இலண்டன் நகரில் நடைபெற்ற வரவேற்பும் உபசாரமும் கண்டு மன்னன் புதிய நம்பிக்கைகூடப் பெற்றான்.

மக்கள் — குறிப்பாக பிரமுகர்கள் மாமன்றத்தார் போலத் தன்னிடம் அருவருப்பு கொள்ளவில்லை, 'ராஜ பக்தி' இருக்கத்தான் செய்கிறது, என்று எண்ணி, ஓரளவு களித்தான்.

அந்த வரவேற்பின் பொருளைமன்னன் உணரவில்லை. மக்கள் உரிமையை மன்னன் வற்புறுத்தலால் வழங்கினான் எனினும்; அதைச் செய்ததற்கு மகிழ்ச்சி தெரிவிக்கவும், இதுபோல மக்களின் உரிமையை வழங்கும் மன்னராட்சிக்கே ஆதரவு கிடைக்கும் என்பதை அறிவிக்கவுமே, வரவேற்பு நடைபெற்றது. மன்னன் இதை மறைந்து கிடக்கும் ஆதரவு என்று தவறாகக் கணக்கிட்டான்.

மாமன்றம், நிலைமையை விளக்கிவிட்டது. அயர் புரட்சி பற்றிய பிரச்னையைக் கவனிக்கக் கூடிய மாமன்றம், படை திரளட்டும், ஆனால் அதன் தலைவராக யார் இருத்தல் வேண்டும் என்பதை மாமன்றமே தீர்மானிக்கும் என்று முடிவெடுத்தது. மன்னன், இதற்கா இணங்குவான்!

படையைத் தலைமைதாங்கி நடத்தும் உரிமை முற்றிலும் மன்னனைச் சார்ந்தது என்று வாதிட்டான். வம்பு வளருகிறது என்று மாமன்றம் எச்சரித்தது; இந்த மூலாதார உரிமையை ஒருகாலும் இழக்க இணங்கேன் என்றான் மன்னன்—பிளவு தெரியலாயிற்று.

அயர் புரட்சியை அடக்க நானே தொண்டர்படை திரட்டுவேன், பதினாயிரவர் முன்வருக! என்றான் மன்னன் படை திரளவில்லை, மாமன்றம் தடைவிதித்தது.

மன்னன் மீண்டும் தத்துவம் பேசினான்—கேட்பார் இல்லை.

மாமன்றம், பழைய ஏட்டைப் புரட்டிப்பார்த்தது, செய்யாது வைத்திருக்கும் காரியம் எது இருக்கிறது என்று அறிய. மக்களால் வலியுறுத்தப்பட்டுவரும் மத அலுவலர்களில் உயர் நிலையில் உள்ளவர்கள் அரசியலில் இடம் பெற்று, செல்வாக்குடன் இருந்தனர். 'அந்த உலகம்' குறித்து அரும் உபதேசம் ஆற்றவேண்டியவர்களுக்கு இந்த உலக' அரசியலில் அக்கரை ஏன் என்று புதுக் கருத்தினர், கேட்டனர். ஜேம்சும் சார்லசும், உறுதியுடன் மத அலுவலர் சார்பில் வாதாடினர். ''பாதிரி இல்லையேல் பார்த்திபனும் இல்லை!'' என்று ஜேம்ஸ் கூறினான் சார்ல்சுக்கும் அதே கொள்கை. அந்த மத அலுவலர்களும், பிரபுக்கள் சபையிலே இடம் பிடித்துக்கொண்டு, எதேச்சாதிகாரத்தை ஆதரித்து வந்தனர். எனவே மக்கள் அவர்களுடைய செல்வாக்கைச் சிதைத்தாகவேண்டும் என்று மன்றம் கூறிற்று. மாமன்றத்திலே, இந்தப் பிரச்னை எடுத்துக்கொள்ளப்பட்டது. மத அலுவலர்களின் செல்வாக்கு, எளிதிலே அழிக்கக் கூடியதல்ல—காரணம் காட்டுபவர்களல்லவே, கர்த்தரைக் காட்டுபவர்கள்! எனவே பிரச்னை காரணமாக, இரு பிரிவுகள் தோன்றிவிட்டன; ஒன்றை ஒன்று கேலிபேசவும் தலைப்பட்டன.

மாமன்றத்தின் சார்பினருக்கு, ரவுண்டுஹெட்ஸ் என்றும் மன்னன் சார்பினருக்குக் கவாலியர் என்றும் பெயரிடப்பட்டது; குட்டைமுடியினர், குதிரைப்படையினர், என்ற பொருள்படும், ஏசலுரைகள் வீசப்பட்டன.

அரசக் கருவூலக் காப்பாளர் பதவி அளித்து, மக்கள் நண்பன் பிம் என்பவரை மயக்கி மடக்கலாம் என்று மன்னன் எண்ணினான், இயலவில்லை.

மாமன்றம், அடுத்த கட்டம் சென்றது. கத்தோலிக்கரை ஏவிவிட்டுக் கலாம்விளைவிக்கவும், போப்பாண்டவரிடம் உதவிபெற்றுத் தாக்குதல் நடத்தவும் முயன்றதாக, ராணி எனிரிடாமீது குற்றப்பத்திரிகை தயாரிக்கலாயிற்று, மன்னன் நடுங்கிப்போனான். எனிரிடாவிடம் நிரம்ப அன்பு கொண்டவன் மன்னன். தன் ஆசைக்கினியாளுக்கே ஆபத்து என்றதும் மன்னனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, இவ்வளவு துடுக்குத்தனத்துக்கும் காரணமாக உள்ள, பிம், ஹாம்டன், ஹாலிஸ், ஆஸ்லிரிக், ஸ்ட்ரோட் எனும் ஐவரையும், கைதுசெய்ய உத்தரவிட்டான்.

ஐவர்மீது, நாட்டைத்தாக்க வேறு நாட்டவரைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

மரணதண்டனைதான் கிடைக்கும் இந்தத் துரோகத்துக்கு!

மன்னனை எதிர்ப்பது மட்டுமல்ல, வெளி நாட்டைத் தூண்டிவிட்டுத் தாயகத்தைத் தாக்க ஏற்பாடு செய்வது மாபெருங் குற்றம்.

கோபத்தைவிட அதிகமாக மக்களுக்குச் சிரிப்புதான் பொங்கியிருக்கும், இந்தக் குற்றச்சாட்டு கேட்டு.

தாயகத்தின் தன்மானத்தைத் தழைத்திடச் செய்வதற்காக, தன்னலத்தை மறந்து, பொதுப்பணியில் ஈடுபட்டு, சிறையை ஏற்று, ஆபத்துகளைத் துரும்பெனஎண்ணிப் பணியாற்றி வரும், மக்கள் விடுதலைப் படையின் முன்னணியில் உள்ளவர்கள் இந்த ஐவர்! இவர்களைத் 'துரோகி' என்று, மக்களை வாட்டி வதைக்கும் மன்னன் குற்றம் சாட்டினால், சிரிப்புப் பொங்கத்தானே செய்யும்.

எங்கள் பிம், எமது ஹாம்டன், துரோகிகளா! யாருக்கு? என்ன துரோகம் செய்தனர்? மன்னனை மக்களாட்சி நடத்துக என்று எச்சரித்தனர் ஐவர்! துரோகமா இது? எதேச்சாதிகாரத்தை ஏற்காதீர் என்று எமக்கு அறிவுரை கூறினர், அது துரோகமா? அடக்குமுறைக்கு

அஞ்சேல்! என்று வீர உரையாற்றினர். துரோகமா! அரண்மனையில் நச்சரவம் இருக்கிறது, அதன் விஷப் பல்லைப் பெயர்த்தாக வேண்டும் என்று கூறினர்! இதில் என்ன துரோகம்! பொதுப் பணத்தைச் சூறையாடினவன், போக போக்கியத்தில் மூழ்கினவன், காமக் களியாட்டக் காரன், காதகம் புரிந்தோன், பக்கிங்காமுகள், லாடுகள், ஸ்ட்ரா போர்டுகள், இவர்கள் துரோகிகள்! இந்த ஐவர், எமது தோழர்கள், உரிமைப்போர் வீரர்கள், அவர்கள் மீது சிறு விரல்பட்டாலும், சிரம் அறுப்போம்! என்று மக்கள் முழக்கமிட்டனர். பல ஆண்டுகளாக அவர்கள் மக்கள் பணியாற்றி வந்ததால் ஏற்பட்டிருந்த ஆதரவு, சாமான்யமானதல்ல! மன்னன் அவர்கள் மீது பாய்ந்தது, மதியற்ற செயலாகும். எண்ணற்ற மக்களின் நெஞ்சிலே இடம்பெற்ற அவர்களின் சொல் படைகளைத் திரட்டக் கூடிய வலிவு பெற்றுவிட்டது. அடக்க முடியாதது என்று எண்ணி மக்கள் ஆயாசப் பட்டபோது துணிந்தால் அடக்கலாம் என்று எடுத்துக்கூறி, எதேச்சாதிகாரத்தை அடக்கிக் காட்டிய அம்மாவீரரை இழக்கத் துளியும் சம்மதியோம், என்று மக்கள் கூறி, வீறுகொண்டெழுந்தனர்! அந்த ஐவர், நாட்டின் இதய நாடிகள்—கரம் வைத்தால் சிரம் போகும் என்றனர் மக்கள்.

இராணி எனிரிடா கண்ணீர் உகுத்துக் கண்ணாளனை வேண்டி நிற்கிறாள். வேந்தன் ஐவரைச் சிறையிலிட உத்தரவிட்டான்.

உத்தரவைத் தாங்கிக்கொண்டு அதிகாரி வந்தான்—உயிர் பிழைத்துக்கொள்ள வேண்டுமானால் ஓடிப்போ! என்று மாமன்றம், அதிகாரியை விரட்டி அடித்தது.

ஐவரின் இல்லங்களிலே அரசன் சார்பினரான படை வீரர் புகுந்தனர்—இழுத்துப் பூட்டினர். மன்னன் தவறு மேல் தவறு செய்த வண்ணம் செல்கிறான். நாடெங்கும் கொதிக்கிறது.

ஐவரைக் கைது செய்ய நானே செல்கிறேன், என்று கூறினான் மன்னன். 300 போர் வீரர் புடைசூழ, சில பிரபுக்கள் உடன்வர, மாமன்றம் வந்தான்.

உள்ளே மாமன்றம் நடைபெறுகிறது, வெளியே மன்னன், முன்னூறு பேருடன், ஐவரைக் கைது செய்ய!

ஐவர், மாமன்றத்தில் இல்லை! அவர்களை நண்பர்கள் வேறிடம் அழைத்துச் சென்றுவிட்டனர். மன்னன் மாமன்றத்துக்குள் நுழைந்தான், எண்பது வீரர் அவனுடன் உள்ளனர். நாடாளும் மன்னன், நாலாந்தர ஐந்தாந்தர அட்டகாசக்காரன் போல, வருகிறான். கண்டறியாத காட்சி! கேட்டறியாத சம்பவம்! இத்தனைக்கும் விலா நொறுங்கியிருக்கும் வேங்கையின் நிலையை எய்தியிருக்கிறான் வேந்தன்.

மாமன்றத்தினர், மரியாதையுடன், எழுந்து நின்று, மன்னனை வரவேற்றனர். அவனுடைய கண்கள் ஐவரைத் தேடின. "பறவைகள் பறந்துவிட்டன! சரி, நான் வந்தது பலன் தரவில்லை. ஆனால் கபர்தார்! அந்த ஐவரை எப்படியும் என்னிடம் பிடித்து ஒப்படைக்க வேண்டும், அவர்கள் துரோகிகள்! இது உங்கள் அரசன் ஆணை" என்று கூறிவிட்டு, வெளிக்கிளம்பினான்.

"உரிமை! உரிமை!" என்று முழக்கமிட்டனர், மாமன்றத்தார்.

மன்னன், மாமன்றத்தைத் தாக்க, பலாத்காரத்தைக் கையாளத் தொடங்கிவிட்டான்—சிறு படைதான்! நூறு பேர்கள்—எனினும், படைதானே! எனவே, இனி படைதான் பேசவேண்டும் போலிருக்கிறது! போர்! ஆம்! மன்னன் நம்மைப் போருக்கு அழைக்கிறான்! அவன் போர்க் கோலம் பூண்டுவிட்டான்! இனி நாமும் அதற்குத் தயாராக வேண்டியதே, என்று தீர்மானித்தனர்.

அந்த ஐவர், துரோகிகள் என்றால், நாம் எல்லாம் யார்? என்று கேட்டுக்கொண்டனர், மாமன்றத்தார்; உடன் பணியாற்றும் தோழர்களாகிய நாமும், துரோகிகளே!! என்று கூறவேண்டுமா! ஐவரைக் காட்டி நம் அனைவரையும்தான் மன்னன் பழிக்கிறான். நாட்டு மக்களின் சார்பிலே நாம் உறுப்பினரானோம், நம் சார்பிலே ஐவர் அரசனுக்குப் பலியாகவேண்டும்போலும் என்றனர்.

நாடு பதைத்தெழுந்தது. ஐவரைக் காப்போம், அவர் மீது அரசன் ஆணை பாயச்சம்மதியோம் என்று ஆர்ப்பரித்தனர். எந்த நேரத்தில் அரசன் படையினர் ஐவரைக் கைதுசெய்யவருமோ என்ற எண்ணத்தில், அன்று இரவு முழுவதும் இலண்டன் நகரமாந்தர், போர்க்கோலத்துடன் விழித்தவண்ணம் இருந்தனராம். வெளி நகர்களிலிருந்து நாலாயிரம் குதிரை வீரர்கள், லண்டன்வந்து சேர்ந்தனராம். கடுமையாகப் போரிட்டு, மக்களைக்கொன்று குவித்த பிறகே, ஐவரைச் சிறைப்படுத்தமுடியும், என்று நாடு கூறிவிட்டது. நாடாளும் மன்னனால், ஐவரைச் சிறைப்படுத்த முடியவில்லை, மக்கள் ஐவருக்கு அரண் அளிக்கிறார்கள்!

வெடிமருந்துச் சாலைக்கருகே தீக்குச்சிபோலாகிவிட்டது ஐவரைக் கைதுசெய்ய மன்னன் முனைந்தது. அடுத்த கட்டம், போர்! வேறில்லை என்பது விளக்கமாகிவிட்டது.

(தொடரும்)

நேசியம்:- காமராஜருக்கு டில்லியில் எவ்வளவு செல்வாக்கு தெரியுமா?

பொதுமக்கள்:- அப்படியா;

நே:- அதிலும் 'ஆவடி'க்குப் பிறகு அவரைப் பற்றிய மதிப்பு அதிகமாயிருக்கிறது.

பொ:- நிஜமாகவா...

நே:- காங்கிரசுக்கு செல்வாக்கு தேடும் வகையில் அவர் ஆட்சி நடத்துவது பற்றி நேருவுக்குக்கூட ரொம்பப் பிரியமாம்.

பொ:- பரவாயில்லையே...

நே:- அடுத்த அகில இந்திய காங்கிரசுக்கு தலைவராகக்கூட வரலாம்...

பொ:- ஆச்சர்யம்தான், நண்பரே.....ஷேக் அப்துல்லா இப்போது எங்கேயிருக்கிறார்...

நே:- ஏன்? சிறையில் இருக்கிறார்...

பொ:- நேருவுக்கு குடும்ப நண்பர், அத்யந்தசகா, காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர் என்றெல்லாம் கூறப்பட்டவர்தானே அவர்...

நே:- அப்படிதானிருந்தார்...ஆனால்...

பொ:- ஆனால், நேருவின் சர்வாதிகாரம் கூடாது—டில்லிக்கு என் காஷ்மீரம் எடுபிடியாக இருக்காது—என்று சொல்ல ஆரம்பித்ததும் அவருக்குக் கிடைத்தது என்ன...சிறை?

நே:- ஆனால்...

பொ:- அதேபோல, காமராஜரும் சொல்லிப் பார்க்கட்டும். பாசமும் பற்றும் எங்கே போகும் தெரியுமா.

நேசி:- இவர் என் சொல்கிறார்.

பொ:- அதுசரி, சொல்லிப் பார்க்கட்டும் ...பிறகு தெரியும். வடநாட்டுக்காரர்களுக்கு ஏனைய காங்கிரஸ் தலைவர்களிடம் ஏதோ அன்பும் பாசமும் கரைபுரண்டோடுவதாகக் காட்டிக்கொள்வதெல்லாம் வெளிவேஷமய்யா வேஷம், அவர்களது, எடுபிடியாக இருக்கும் வரையில்தான் இதெல்லாம் இல்லையென்றால்...

சிலுவை, கண்டு!

காடு மலை, வனம் வனாந்திரம் ஆகியவைகளைக் கடந்து சென்று, கிருஸ்தவப் பாதிரிகள், அறிவுக் கதிர் பரப்பும் அன்புப் பணியாற்றி வருவதைப் பாராட்டி, அவர்கட்கு நன்றி கூறினார், பர்மியப்பிரதமர் யூநா.

யூநா, புத்தமதத்தினர்—இந்தியா வருகிறபோதெல்லாம் அவர் புத்த மார்க்க புனித இடங்களுக்குச் சென்று வருவது வாடிக்கை.

எனவே, அவர், கிருஸ்தவபாதிரிகள், கல்வி, மருத்துவத் துறைகளிலே பணியாற்றுவது குறித்துப் பாராட்டிப் பேசுவது, வரவேற்கத் தக்கது மட்டுமல்ல, குறிப்பிடப்பட வேண்டியதாகிறது.

கிருஸ்தவப் பாதிரிகள், மருந்தும் மதியும் வழங்குவதுடன் சிலுவையையும் தருகிறார்கள்—இந்துமார்க்கத்தவர்களில், ஏழை எளியவர்கள், இளித்தவாயர்கள் மதமாற்றத்துக்குப் பலியாகிறார்கள், என்று பலமான புகார் பரவி, கிருஸ்தவப் பாதிரிகளைச் சந்தேகக் கண்ணுடன் பார்ப்பதும், அவர்களுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சர்க்காருக்குக் கூறுவதும், அவர்கள் நடாத்தும் மதமாற்றத்துக்கு 'எதிர்ப்பு, நடத்துவதும், வடநாட்டில் பல வேறு இடங்களிலே காண்கிறோம்.

ஏழை எளியவர்கள்—ஏமாளிகள்—இளித்த வாயர்கள்—இவர்கள் ஏய்க்கப்படுகிறார்கள், என்று இந்து மதக் காப்பாளர்கள் கூறுகிறார்கள். அது எந்த அளவு உண்மை என்பது ஒரு புறம் இருக்கட்டும்; இதற்குப் பரிகாரம் என்ன? பாதிரிகளை விரட்டுவதா? கிருஸ்தவர்களின் கல்வித் தொண்டும் வேண்டாம் என்று கூறிவிடுவதா? உண்மையான பரிகாரம், ஏழை எளியவர், ஏமாளிகள், இளித்த வாயர், ஏன் இந்து சமுதாயத்தில் எண்ணற்றவர்களாக உள்ளனர் என்று கண்டறிவதும், அவர்களை முழு மனிதராக்குவதுமே தவிர, சிலுவையின் மீது சீறுவது, பரிகாரம் ஆகாது.

ஆனால், எளிதான காரியம் அது, எனவே, வேறு ஆற்றலுள்ள காரியமாற்ற இயலாதாரும், இந்து மார்க்கத்தின் விளைவாக உள்ள ஜாதிபேதம், அறியாமை, வறுமை ஆகியவற்றை அகற்றும் அரும் பணியாற்றிட வகையிலாரும், தமது கோபப்பார்வையை பாதிரிகள் மீது செலுத்தி, 'இந்துமத ரட்சகர்' என்று 'விருது' பெற விழைகிறார்கள்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாசுரமும் பதிகமும் அருளி, திருத்தலமும் திருக்குளமும் ஊரெங்கும் அமைத்து, வைணவத்தையும் சைவத்தையும் வளமும் வலிவும் உள்ளதாக்கி, பட்டத்தரசர்களும் சீமான்களும் பணாபிஷேகம் செய்து, இந்து மதத்தை வளர்த்திருக்க, பிறையும் சிலுவையும் இங்கு இந்த அளவுக்கு இடமும் ஏற்றமும் பெற்றதற்கான காரணத்தைக் கண்டறிய, மவுலிகளையும் பாதிரிகளையும் கண்காணித்தல் முறையல்ல, பயனுமளிக்காது, அக்கிரகாரம் சேரி, என்று ஊரும், பார்ப்பனன் சூத்திரன் பஞ்சமன் என்று சமுதாயமும், பிரிக்கப்பட்டு, பேதப்பட்டு கிடக்கும் நிலையைப் பரிசோதித்து பார்ப்பதுதான் பயனளிக்கும்,

யூநா, நானும் பர்மிய புத்த மார்க்கத் தலைவர்களும், கிருஸ்தவப் பாதிரிகள் மீது சந்தேகப் பட்டுக் கொண்டுதான் இருந்தோம், ஆனால் அவர்களுடைய தன்னலமற்ற தொண்டு என் சந்தேகத்தை போக்கி விட்டது; என்னை மன்னித்தருளும்படி கிருஸ்தவப் பெரியவர்களைக் கேட்டுக் கொள்ள நான் வெட்கப்படவில்லை, என்று பர்மா கிருஸ்துவ கழகத்தில், ரங்கூனில், ஆகஸ்ட் 7 ம்நாள் பேசியிருக்கிறார்.

பர்மாவில் பயங்கரமான தாக்குதல், கடந்த போரின் போது நடைபெற்றபோது, ஆபத்துக்கு அஞ்சாமல், கிருஸ்துவப் பாதிரிகள், தியாக உள்ளத்துடன், கல்வித் துறையிலும், மருத்துவத்துறையிலும் அரும்பணியாற்றினர். யூநா இதுகண்டு உள்ளம் பூரித்ததுடன், இத்தகைய தூய தொண்டாற்றும் கிருஸ்தவர்கள் மீது கொண்டிருந்த சந்தேகம் நீக்கப்பட்டவரானார்.

இங்கும், பாதிரிகள் மீது பகை கக்குவதை வேலைத் திட்டமாகக் கொள்வதன் மூலம் இந்து மதத்தைக் காப்பாற்றலாம் என்று கருதுவோர் அம்முறை தவறு என்பதறிந்து, எந்த ஏழை எளியவர்களைப் பாதிரிகள் வலையில் விழச் செய்கிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார்களோ, அந்த இல்லாதாரிடம், அன்பு பொழியும் அறத் தொண்டாற்ற முன்வருதல் வேண்டும்.

சர்க்காரும், யுகயுகமாக இருந்து வருவதாகக் கூறப்படும் இந்து மதத்தின் காவலர்களும், அரசர்கள் வணிகப் பெருமக்கள் ஆகியோரின் காணிக்கையினைக் குன்றெனக் குவித்து வைத்துக்கொண்டு, ரிடபக்கொடி பறக்க, பட்டணப்பிரவேசம் சிறக்க, கொலுவீற்றிருக்கும் தம்பிரான்களின் தங்கக் கோட்டைகளாக உள்ள மடாலய அதிபர்களும், ஏறிட்டும் பாராமல், ஏனென்று கேளாமல் இருந்த போது, பட்டிதொட்டிகளில், விளக்கம் விவரம் அறியாதாரின் நடுவில் அமர்ந்து, எழுத்தறிவித்தும் நோய் போக்கியும், பாதிரிகள் தொண்டாற்றினர்; ஏன் அங்கிலையில் 'சிலுவை' யை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பர்.

எத்தனைக் கல்விக் கூடங்கள் காட்ட முடியும், இந்துமதத்தின் தலைவர்கள் அமைத்தவை! மருத்துவமனைகள் உண்டா, தொழிற் கூடமுண்டா, என்ன அமைத்தனர்! கொட்டு முழக்குடனே கோவிந்தா என்று கூவினதும், பல்லக்கு வைபவம் நடத்தியது மன்றி, ஏழைக்கு இதமளிக்க, அறிவுக் கண்ணைத் திறந்துவைக்க, எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி என்ன? கணக்குக் காட்ட முடி

திருமணம்

சென்னை திருவொற்றியூர் தோழர் மா. வெ. நாராயணசாமி—தோழியர் ஜயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் 4—9—55 ஞாயிறு காலை 8-மணிக்கு தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் திருவொற்றியூர் சுப்பிரமணிய செட்டி சத்திரத்தில் நடைபெறும். தோழர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார்.

யுமா? கண்டனம் அலை அலையாகக் கிளம்பி, அடித்தளமே அழிந்துபடுமோ என்ற அச்சம் பிடித்தாட்டியபிறகல்லவா, ஆதீனங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கல்விக்கூடங்களையும், மருத்துவ மனைகளையும், கட்டிவரக்காண்கிறோம்.

இன்றும், கிருஸ்தவப் பாதிரிகள் போல், கிராமத்தில் தங்கியிருந்து, பாமர மக்களிடம் பழகி, அவர்களுக்கு வந்துறும் அல்லலைத் துடைத்திடப் 'பாதிரிகள்' பாடுபடுவது போல, எந்தச் சாமியார் இருக்கிறார்; சட்டிச்சாமி, மொட்டைச்சாமி, குட்டைச்சாமி, குறுந்தடி கொண்டசாமி, என்று 'ரகரக' மாக இருக்கிறார்கள்—யார், பாதிரிகள் போல ஏழை எளியவரிடம் தங்கிப் பணியாற்றுகிறார்கள்!!

யூநா, பெற்ற தெளிவு போல, இங்குள்ள மதக்காப்பாளர்களும் பெற வேண்டும். வில்வமும் துளசியும் யாராரின் அறிவையும் வாழ்வையும் வளப்படுத்தத் தவறிவிட்டதோ, அங்கெல்லாம், பிறையும் சிலுவையும் ஏற்றமடையத் தான் செய்யும்!!

பீதி கொள்வது பேதமை, பகைகக்குவது அதனினும் கேடுள்ளது; யூநா போல உண்மையை உணருவதே சிறந்தது, சிலுவை சிற்றத்தை அல்ல, சிந்தனையைக் கிளற வேண்டும்!

★

★ இரண்டு மாதம் ★

இனிஎன்ன கவலை?ஏக்கம் பறக்கும்' துக்கம், தூர ஓடும்.

வழி கண்டு பிடித்துவிட்டார்.

அவ்வளவு சாமர்த்தியம் இல்லையென்றால், அவரை ஒரு பெரிய உபகண்டத்துக்கே, தலைவராக அமர்த்தியிருப்பார்களா?

வட நாடு-தென்னாடு என்கிற பேச்சு, இனி மடிய வேண்டியதுதான்.

ஏழையின் கண்களில் புது ஒளி பூக்கும். இல்லாதவனே, இனி இரான்.

தி. மு. கழகத்துக்கு இனி வேலையில்லை—இனி, எப்படி, திராவிட நாடு, அது இது, என்று பேச முடியும்?

இரண்டே மாதம்; தவறினால் ஆறே ஆறு வாரங்கள்?

ப்பூ! ப்பூ!! — என்று, எல்லோருடைய துயரங்களையும், ஓடச் செய்து விடுவார்.

ஆலைகள் இல்லையா அசடனே, இதோ பார், யார் நான்; இரண்டு மாதம் இருக்கிறேன்-போதாதா? வயலில், புயலா?— வக்ரமபுத்தி போகாதே, உனக்கு; இரண்டு மாதம்-எல்லாம் சரியாய்ப் போய்விடும்.

இனி, என்ன கவலை? தோழர்காள்! துயரமடைந்த முகங்களைத் துடைத்துக்கொள்ளுங்கள். ஒளி பூக்கட்டும் உங்கள் கண்களில். பஞ்சம் பறக்கப் போகிறது என்று முரசடியுங்கள். பஞ்சையும் பராரியும் இனி பார்க்கக் கூட கிடைக்கமாட்டார்கள்—ஆகவே, ஒருமுறை ஓடிச் சென்று இப்போதே பார்த்து வையுங்கள்.

கவலை தீரப்போகிறது — கடாட்சம் கிடைத்துவிட்டது — 'கனம்' ராசேந்திர பிரசாத், ஆண்டுக்கு இரண்டு மாதம் ஐதராபாத்தில் தங்கி, நம்மையெல்லாம் பரிபாலனம் செய்வதாக வாக்களித்துவிட்டார்!

ஏதோ இதுவரையில், இவர் இங்கு வந்து பரிபாலனம் செய்யாததாலேயே வடநாடு-தென்னாடு என்கிற பேதமும், இந்தி வேண்டாம் என்கிற இயக் குமுறலும் எழும்பியதுபோலவும்- இனி யாவும் சமாப்தி ஆகிவிடுமென்ற நம்பிக்கையிலும், கர்னூலில் பேசிய போது, ராசேந்திரர் வெளியிட்டிருக்கிறார்—"வடக்கு, தெற்குக்கு பாரபட்சம் காட்டி வருவதாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது தவறு என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே, ஐதராபாத்தில், ஜனாதிபதி, ஒரு வருடத்துக்கு சுமார் இரண்டு மாத காலம்—தவறினால் ஆறு வார காலமாவது—தங்கவேண்டும் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்று வெளியிட்டிருக்கிறார்.

எப்படி மனம் இரங்கிற்றே! எப்படித் தான் இதயம் இளகிற்றே-தெரியவில்லை. இரண்டு மாத காலம் — இங்கே தங்கப்போவதாகச் சொல்லிவிட்டார்.

அவர் கூற்றைக் கேட்டபோது, 'ஐயோ பாவம்' என்று சொல்லத் தோன்றுகிறது, நமக்கு. எவ்வளவு தெளிவு. எவ்வளவு தூரம் பிரச்னையைப் புரிந்திருக்கிறார், புவியாள்பவர்!

★

'ரக்ஷா பந்தன்!'

—[]—

புராதன அய்தீகப்படி, பெண்கள், எப்போதும் ஆடவர்களாலே போட்சிக்கப்பட வேண்டியவர்கள், கணவன்—அவனுக்குப் பிறகு மகன்—அல்லது அண்ணன் தம்பி, இப்படி! இந்தக் கர் நாடகக் கொள்கை பெண்களின் உரிமைக்கே உலைவைத்து அவர்களை இழிவு படுத்துகிறது என்று, பாடியாலா வில் துணிவுடன் ஒரு மாது கூறி விட்ட செய்தி கிடைத்திருக்கிறது.

விரத நாளில், அண்ணனுடைய கரத்தில், நோன்பு கயறு கட்டி, தங்கை, தன்னை அண்ணன் ரட்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வது அய்தீகம்.

ஆகஸ்ட் 7-ந்தேதி பாடியாலாவில் ஒரு பெண்மணி இந்த 'ரட்சாபந்தனம்' கட்ட முடியாது என்று கூறி விட்டாள். அய்தீகத்தில் பிடிவாதம் கொண்டவர்கள் இதை ஒரு புரட்சி என்று கூறி எதிர்த்தனர். அர்த்த மற்ற இந்தச் சடங்கு, பெண்களைக் கேவலப்படுத்துகிறது என்று கூறி, மற்ற மாதர்களிடமும் இந்த ரட்சா பந்தன முறையை ஒழித்துவிடும்படி அந்த அணங்கு, பிரசாரம் செய்ததாகத் தெரிகிறது.

சமத்துவம் பேசப்படும் இந்த நாட்களிலே, இந்தச் சடங்கு ஏன், என்று விழிப்புற்ற அந்த வனிதை கேட்பதை, பகுத்தறிவாளர் யாவரும் வரவேற்கத் தான் செய்வர். வைதீகங்கள், ஆச்சரியத்தால் வாய்பிளந்து, அச்சத்தால், முணுமுணுத்த படி இருக்கும். வளர்க சமத்துவம்! ஒழிக பெண்ணடிமை!

★

சபாஷ், சாது!

கோவாவுக்குள் நுழைந்த அறப்போர் வீரர்களில், சில சாதுக்களும் இருந்தார்களாம்.

அவர்களது ஜடா முடியையும், தாடியையும் பிடித்து இழுத்து, வதைத்தார்களாம், கோவா வெறியர்கள்.

தாங்க முடியாத ஒரு சாது, "உங்களைச் சபித்துவிட முடியும்? ஆனால் சபிக்கவில்லை, எங்கள் தாய்நாட்டு மண்ணுக்குத்தானே பாபம் என்பதால்;" என்றாராம். எப்படி!

திரட்டு

இனகாவலர்!

"நீங்கள் அதிஷ்டசாலிகள்! உங்களுக்கு, ஒரு நல்ல சர்க்கார், இருக்கிறது; ஆனுல், எங்களுரை ஆள்வதோ, மோசமான சர்க்கார்" என்று பம்பாயிலே, ஆச்சாரியார் பேசிஞரல்லவா! அதைக் கண்டித்து குடந்தை மூப்பனுரும், பற்பல எம். எல். ஏக்களும் சீறுவதாகவும் படித்தோம் பத்திரிகைகளில்!! "ஏனய்யா! இங்கே நடப்பதும், காங்கிரஸ் சர்க்கார்தான்— அங்கே நடப்பதும் காங்கிரஸ் ஆட்சிதான். ஒன்று ஒசத்தி! இன்னென்று மட்டம்! என்ருல், என்ன அர்த்தம்?" என்று கேட்டார், நண்பர் ஒருவர்! நமக்கும், அதுதான் ஐயத்தைக் கிளப்புகிறது! ஆச்சாரியார் இன்னும் காங்கிரசில் தானிருக்கிருர்! ஒசத்தி' என்று சொன்னுரே பம்பாய் சர்க்காரைப் பார்த்து; "அவர்களது 'திறமை' பம்பாயிலுள்ள தாராவிப் பகுதியைப் போய்ப் பார்த்தால் தெரியும்! நாற்றம், குடலைப் பிடுங்கும்! ஆனுல், ஆச்சாரியாருக்கு அதுகள் எப்படி கண்ணில் தென்படும்? தாராவியில், தவிப்போர், திராவிடர்கள்! அவர் பேசிய இடமோ, மாதுங்கா!" என்று பம்பாய்த் தோழர் ஒருவர், தீட்டியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகிருர். உண்மைதானே!

எப்படி, பதில்!

"என்னப்பா! இப்பொழுதுதான் வந்தாயா?"

"ஆமாங்க! வீட்டில், சர்க்கரைப் பொங்கல்தான், சாப்பிட்டேன்!"— கேட்ட கேள்விக்கு, இப்படிப் பதில் சொல்பவரைக் செவிடன் என்பீர்கள்! ஆனுல், நமது நிதியமைச்சர், 'காதற்ற ஊசியும் வராதுகாண் கடை வழிக்கே' என்று எங்காவது பேசும் சித்தம் கொண்டவரே ஒழிய, காது அற்றவரல்ல! ஆயினும், இப்படி பதில் சொல்லியிருக்கிருர், சட்டசபையில்.

பழனியாண்டி:- இலங்கை ஐ. கமிஷனராக இருந்தவர் வடநாட்டைச் சேர்ந்தவர் என்பதால் இப்பகுதியைச் சேர்ந்த இந்தியர்களுக்குப் போதிய சலுகைகள் கிடைப்பதில்லை என்று புகார் இருந்ததே. இப்போது ஐ கமிஷனராக இருப்பவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவரா? தமிழ் மக்களுக்கு சலுகை காட்டும் வகையில் ஏதாவது செய்திருக்கிருரா?

அமைச்சர்:- அவர், ஐ. சி. எஸ். அதிகாரி!!

சுயநலம்

"சமுதாய நல திட்டம், தேசீய வளர்ச்சித் திட்டம் என்பவைகளின் பெயரால் காங்கிரஸ் பிரசாரமே செய்யப்படுகிறது! காங்கிரசின் எடுபிடிகளைப் பராமரிக்கவே பயன் படுத்தப் படுகிறது! என்று பலரும் சொல்லி வருகிருர்களல்லவா? இதைக் குறிப்பிட்டு நாராயண குருப் என்பார், சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். சர்க்கார் உத்யோகங்களுக்கு ஆட்களை எடுக்க சர்வீசு கமிஷன் என்று ஒன்று உள்ளது! இந்தத் 'திட்டங்களுக்கு' அதிகாரிகளை நியமிப்பதென்ருல், அக்கமிஷனைக் கலக்கவேண்டியதில்லை யென்று, சர்க்கார் முன்னமே ஒரு சட்டம் செய்து கொண்டிருக்கிருர்கள்! இது நியாயமா? —என்பதுதான், தோழர் குருப்பின் கேள்வி, மக்கள் செலுத்தும் வரிப் பணத்தைக்கொண்டு, உங்கள் கட்சி ஆட்களுக்கு வேலைதரவும்— உங்கள் கா.சியைப் பற்றி விளம்பரம் செய்துகொள்ளவும், இப்படி அநியாயம் செய்யலாமா?-என்று பல எதிர்க் கட்சியினரும், சபையில் கண்டித்திருக்கிருர்கள்! சர்க்கார் சார்பிலோ, சரியானபதில் தரப்படவில்லை-பூசிமெழுகியிருக்கிருர்கள். எப்படியிருக்கிறது ஜன நாயகம்!!

பற்களின் பயன்!

முல்லையோ! முத்தோ!—வர்ணிக்க மட்டுமல்ல, கொலை வழக்குகளைக் கண்டு பிடிக்கவும், பற்கள் பிரயோசனப்படுமாம். இது குறித்த விஷயங்களை விளக்குவதற்காக கோபன்கேகனில் அகில உலக பல் வைத்தியர்கள் மாநாடு ஒன்று இந்த வாரம் நடைபெறுகிறது. அந்த மாநாட்டுக் கண்காட்சியில், பல சிக்கலான வழக்குகளைக் கண்டுபிடிக்க உதவிய பற்கள் வைக்கப்பட்டிருக்கிறதாம். இலண்டனில் ஒரு பெரிய கொள்ளைக்காரன், ஆறுபேரைக் கொன்றுவிட்டானும்— அந்த 6 பேருடைய பற்கள் மட்டுமே கிடைத்ததாம்! அதைக்கொண்டு,துப்பு துலக்கி, அவன் தூக்குமேடைக்கு அனுப்பப்பட்டானும்!

மிருகக்கூடு!

ஒட்டகம்—எருமை—கழுதை—நாய் எல்லாம் சேர்ந்த கூடுதான், ஒரு மந்திரி என்கிருர், எம். வி. கிருஷ்ணப்பா! டில்லி மந்திரி அவர்! உண்பதில் ஒட்டகமாகவும், வலிவில் எருமையாகவும், தொண்டு செய்வதில் கழுதையாகவும், தூங்கி விழிப்பதில் நாயைப் போலவும் இருக்கவேண்டும். என்று, விளக்கியுள்ளார். இத்தனைக் குணங்களும் சேர்ந்தவர்தான், நல்ல மந்திரிக்கு அடையாளமாம்! இதைப்படித்த அலுவலகப் பையன் கேட்கிருன், "ஏன், சார்! கிருஷ்ணப்பா சொல்வது போல, பல மந்திரிகள், ஒரே ஒரு குணம்மட்டும் கொண்டவர்களாக இருக்கிருர்களே. அவர்களின் குணத்தைக் குறிக்கும் மிருகத்தின் பெயரைச் சொல்லியே கூப்பிடலாமா?" என்று, குறும்புக்காரப் பையன்!!

நிலையம்-மன்றம்

இந்தியத் தலைவர் ராசேந்திரர், ஐதராபாத்திலுள்ள தனது மாளிகையை 'நிலையம்' என்று குறித்தாரல்லவா! சென்னையிலேஉள்ள'ஸ்ரீஜத்துக்கள்' மன்றம் ஒன்றை நிறுவியுள்ளனர்—விவசாயிகள் பேரால்! இந்த மன்றம், விவசாயிகளின் பிரச்னைகளை அலசி, அவைகளைத் தீர்க்கப் பரிகாரம் காணுமாம். தலைவர், பக்தவச்சலம்! விளைவுகளைப் பற்றின ஆராய்ச்சியேன் பிறகு! தமிழில், 'கழகம்' 'வாழ்க்கைத் துணை ஒப்பந்தம், என்று சொன்னுல், நையாண்டி செய்தவர்களே, இப்போது, தமிழ்ப் பெயரைத் தேடுகிருர்கள். இதனுல்தான், மறுமலர்ச்சிக்கு ஆரம்பத்தில் எதிர்ப்பு இருந்தாலும், பிறகு வெற்றிபெறும் என்று 'உலகம்' சொல்லுகிறது!

சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில்

அண்ணுதுரை

தலைமையில்

4-9-55 ஞாயிறு அன்று

மு. கருணுநிதி

தீட்டிய;

"மணிமகுடம்"

(எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர்)

நாடகம்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.